வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 05 | 14.11.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 338 | பக்கங்கள் : 16

*13ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம்*

## பல்கலைக்கழகங்கள் அமைக்கும் அதிகாரம் மாகாண சபைகளுக்கு

*கொழும்பு, நவ. 14*

*13ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் பல்கலைக்கழகங்கள் அமைக்கும் அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும். இதன்மூலம் உயர்தரம் பயிலும் அனைவருக்கும் பல்கலைக்கழக கல்வியை பெற்றுக்கொள்ள முடியும் என ஜனதிபதி தனது வரவு-செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்டார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்-*

*4 புதிய பல்கலைக்கழகங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*2 அல்லது 3 ஆண்டுகளுக்குள் நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படும்.* 11

## வடக்கு - கிழக்கில் வீடற்ற குடும்பங்களின் மீள்குடியேற்றத்துக்கு ரூ. 2000 மில்லியன்!

*கொழும்பு, நவ. 14*

*வடக்கு-கிழக்கில் வீடற்ற குடும்பங்களின் மீள்குடியேற்றத்திற்காக 2,000 மில்லியன ரூபா ஒதுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.*

*பாராளுமன்றில் நேற்று 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட உரையினை முன்வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை கூறினார்.*

*அதேவேளை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முரண்பாடுகள் முடிவுக்கு வந்து இதுவரை மீள்குடியேற்றம் செய்யப்படாத இடங்கள் உள்ளன. இதற்காக இரண்டாயிரம் மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படவுள்ளது.*

*நன்னீர் மீன்பிடித் தொழிலின் அபிவிருத்திக்காக இருநூறு மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படவுள்ளது. யாழ்ப்பாணத்தில் நிலவும் தண்ணீர் பிரச்னைக்கு தீர்வை வழங்குவதற்கான அடிப்படைப் பணிகளுக்காக 250 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். (அ)*

## இம்முறை பட்ஜெட்டில் பழைய பிரேரணைகள்!

*கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ*

*கொழும்பு, நவ. 14*

*இவ்வருட வரவு - செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட பல விடயங்கள் கடந்த முறை வரவு - செலவுத் திட்டத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணைகளே என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.*

*ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சராக நேற்று பிற்பகல் தனது வரவு-செலவுத் திட்ட உரையை சமர்ப்பித்த பின்னர் பாராளுமன்ற வளாகத்தில்* 11

# அரச ஊழியர்களுக்கு ரூ. 10 ஆயிரம் உயர்வு

- வடக்கு, கிழக்கில் அபிவிருத்தித் திட்டங்கள்
- பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமை

### ஜனாதிபதி ரணிலின் பட்ஜெட் இதுதான்

**கொழும்பு, நவம்பர் 14**

**2024ஆம் ஆண்டு ஜனவரி முதல் அரச ஊழியர்களின் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார்.**

**அதேவேளை, ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவும் 2 ஆயிரத்து 500 ரூபாவால் அதிகரிக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.** 11



## பிரிட்டன் வெளியுறவு அமைச்சராக முன்னாள் பிரதமர் டேவிட் கமரூன்!



*லண்டன், நவ. 14*

*இங்கிலாந்தின் முன்னாள் பிரதமரான டேவிட் கமரூன் வெளியுறவுத்துறை அமைச்சராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.*

*பலஸ்தீன ஆதரவு பேரணியை பொலிஸார் கையாண்ட விதம் குறித்து பதவி நீக்கப்பட்ட உள்துறை அமைச்சர் சுவெல்லா பிரேவர்மென் விமர்சித்ததால் ஏற்பட்ட சர்ச்சையை அடுத்து இங்கிலாந்து பிரதமர் ரிஷி* 11

## சென்னையில் இருந்து யாழ். வந்த விமானம் மோசமான வானிலையால் திரும்பி சென்றது!

*பயணிகள் சென்னை ஹோட்டல்களில் தங்கவைப்பு*

*சென்னை, நவ.14*

*சென்னையில் இருந்து 28 பயணிகளுடன் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கு புறப்பட்டு வந்த அலையன்ஸ் எயார் பயணிகள் விமானம், இங்கு நிலவும் மோசமான கால நிலை காரணமாக தரை இறங்க முடியாமல் மீண்டும் சென்னை திரும்பியது.*

*இந்த விமானம் இன்று காலை மீண்டும் யாழ்ப்பாணம் வரும் என்று* 11

## அரச ஊழியர்களின் சம்பளத்தை நினைத்தவாறு உயர்த்த முடியாது

*வரியையும் அதிகரிக்க வேண்டும் என்கிறார் ஜனாதிபதி*

*கொழும்பு, நவ. 14*

*"அரச ஊழியர்களின் சம்பளத்தை நினைத்தவுடன் அதிகரிக்க முடியாது. சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என்றால் வரியையும் அதிகரிக்க வேண்டும்."*

*- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.*

*2024ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பித்து உரையாற்றும்* 11

## அடுத்த ஆண்டு 2 தேர்தல்கள்

*கொழும்பு, நவ. 14*

*அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலும் பொதுத் தேர்தலும் நடத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.*

*2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை தாக்கல் செய்து உரையாற்றிய போதே அவர் இந்த அறிவிப்பை விடுத்திருந்தார். (அ)*

## துண்டுவிழும் தொகை 2,851 பில்லியன் ரூபா!

*கொழும்பு, நவ. 14*

*வரவு செலவுத் திட்டத்தில் 2024 ஆம் ஆண்டில் அரச வருமானம் 4,172 பில்லியன் ரூபாவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.* 11

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு இழப்பீடு!

*கொழும்பு, நவ.14*

*வடக்கு மற்றும் கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான இழப்பீட்டை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இதற்காக மேலும் 1000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு* 11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது

இப்போதெல்லாம் இந்தப் பத்தியில் எழுதுவதற்கு பல விடயங்கள் ஒரே நாளில் கிடைத்து விடுகின்றன. இதனால் எதனை எழுதுவது, எதனை விடுவது என்பது திண்டாட்டமான விடயமாகி விடுகின்றது.

அப்படி விடுபட்டுப்போன விடயம் ஒன்றை நேற்று நினைவுபடுத்திய நபர் ஒருவர், ஏன் அதனைத் தவிர்த்தீர்கள் என்று கேட்டிருந்தார்.

இப்போதெல்லாம் வடக்குக்கு இந்திய தரப்பிலிருந்து ஒருவர் வந்துபோனால் உடனே சீன தூதுவரோ அல்லது வேறு தூதரக அதிகாரிகளோ வந்து செல்வார்கள்.

இந்திய மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் இலங்கை வந்திருந்தபோதும் யாழ்ப்பாணம் வந்து அங்கிருந்து சென்னை திரும்பியிருந்தார். அவர் யாழ்ப்பாணம் வந்தது, நல்லூர் கந்தனை தரிசிக்கவும், இந்தியன் வங்கி கிளையை திறந்துவைக்கவும் தான். அவர் தமிழ் மக்களைச் சந்திக்கவில்லை, ஆனால் தூதரகமே தமக்கு விருப்பமான சிலரை அழைத்து அவர்கள் அமைச்சருக்கு வரவேற்பு வழங்கியதாக அறிவித்திருந்தது. சிலவேளை, அமைச்சர் வருவதை விரும்பக் கூடியவர்களை மாத்திரம் தெரிவுசெய்து அழைத்து, அவர்கள் வரவேற்பு வழங்கியதாக துணைத்துாரகம் அறிவித்ததோ தெரியவில்லை.

அவர் வந்து சென்ற பின்னர் வடக்கிற்கு விஜயம் செய்திருந்த சீன தூதுவர் வடக்கில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டதுடன், பல்வேறு உதவித்திட்டங்களையும் வழங்கி வைத்திருந்தார்.

யுத்தம் முடிவடைந்ததும், வடக்கு ஓர் இராணுவ ஆட்சியின் கீழ் இருப்பதுபோன்ற பிரமையில் இருந்தது இரகசியமானதல்ல. எல்லாவிடயங்களிலும் இராணுவத்தினரின் பிரசன்னம் இருந்தது. உள்ளூர் இராணுவ அதிகாரிகள் இல்லாத விழாக்களே இல்லை என்ற நிலைமை இருந்தது. அவர்களும் தினமும் தமிழ் மக்களுக்கு ஏதாவது உதவிகளைச் செய்துகொண்டே இருந்தார்கள். வீடுகளைக் கட்டிக் கொடுப்பது, பாடசாலைகளுக்கு கல்வி உபகரணங்களை வழங்குவது, வறிய மக்களுக்கு உதவிகளை வழங்குவது என்று இராணுவத்தினர் ஓடிஓடி உதவிக் கொண்டிருந்தனர்.

அவ்வாறு அவர்கள் உதவி வழங்கிக்கொண்டிருந்த பின்னர் முதலில் வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்றபோது, ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (அதுதான் அப்போது மகிந்த ராஜபக்ஷவின் கட்சி) சார்பில் போட்டியிட வேட்பாளர்கள் தெரிவு நடைபெற்றபோது அந்த வேட்பாளர் தெரிவில் இராணுவத்தினரின் கை முக்கிய பங்கு வகித்தது. அது மாத்திரமல்ல, தமக்கு விருப்பமானவர்கள் சிலரை இராணுவமே வேட்பாளராகவும் நிறுத்தியது.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை, மற்றும் காங்கேசன்துறை துறைமுகத்தில் மூழ்கடிக்கப்பட்ட கப்பல்கள் என்பவற்றிலிருந்து பழைய இரும்புகளை எடுத்து விற்று பல கோடிகளை சம்பாதித்த ஒருவரான 'சிராஷ் நானா' திடீரென்று யாழ்ப்பாணத்தில் வேட்பாளரானதும், அவர் ஓடி ஓடி மக்களுக்கு உதவிசெய்ததையும் வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள். திடீரென்று ஓர் இடத்திற்கு போகும் அவர், அங்குள்ள மக்கள் ஏதாவது வீதியை புனரமைக்க வேண்டும் என்று கேட்டால், உடனே அங்கிருந்தவாறே ஒருவருக்கு தொலைபேசி அழைப்பு எடுப்பார். அடுத்த சில நிமிடங்களில் வீதியை செப்பனிட என்று ஒரு டிப்பரில் கல்லோ மண்ணோ கொண்டு வந்து போடப்படும். அவர் பிறகு சொல்லுார், எனக்கு வாக்குப் போடுங்கள், மிகுதி சாமான்கள் வந்துசேரும் என்று. அவருக்கு பின்னால் அப்போது யார் இருந்தார்கள் என்பதும் இரகசியமானதல்ல. ஆனால் தேர்தல் முடிந்த பின்னர் தான் அவருக்கு தமிழ் மக்கள் யார் என்பது தெரியவந்தது. அவர்களுக்கு மாத்திரமல்ல, அவரை வேட்பாளராக்கிய இராணுவத்தினருக்கும் தெரிந்திருக்கும்.

இராணுவத்தினரோ அல்லது சிராஷ் நானாவோ தமிழ் மக்களுக்கு உதவுவதன் மூலம் தாங்கள் பதவிகளைப் பெறலாம் என்றுதான் நம்பினார்கள்.

ஆனால் சீனாவின் உதவி நமது வாக்குகளுக்காக அல்ல என்பது நமக்குத் தெரிந்ததுதான். ஆனால் அவர்கள் எமக்கு உதவுவது எதற்காக என்பதும் தெரிந்ததுதான்.

அதற்காக நமக்கு உதவ முன்வருபவர்கள் எவரும் நமக்காக வருவதில்லை. அதனையே இந்தியாவும் செய்துகொண்டிருக்கின்றது. ஆனால் நமது பிரச்னையில் இந்தியா ஒருதடவையாவது தலையிட்டது. அதன் தலையீடு காரணமாகவே மாகாணசபைகள் கிடைத்தன. அது நமக்கு போதுமானது அல்ல என்றாலும், அது நமது பிரச்னைக்கு முழுமையான தீர்வை தரப்போவதில்லை என்பதும் விவாதத்திற்கு உரியதல்ல. ஆனால் அவர்கள் அதனையாவது தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக என்று நாம் வாதிட்டாலும், செய்திருக்கின்றார்கள்.

ஆனால் தமிழ் மக்களுக்கு உதவுவதற்காக வடக்கு வரும் சீனத்தூதுவரோ, அரசியல் விவகாரங்களில் உதவுங்கள் என்று கேட்டால், "சீனா மற்றைய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதில்லை" என்று "வெட்டு ஒன்று துண்டு ரெண்டு" என்பதுபோல பதிலளித்து வருகின்றது.

இந்நிலையில், சீனாவின் உதவியையும் நாம் புறக்கணிக்கக்கூடாது என்றும், இந்தியாவை மாத்திரம் நாம் நம்பிக்கொண்டிருக்கக் கூடாது என்றும் இப்போது நம் மத்தியில் இருந்தும் குரல்கள் எழும்பத் தொடங்கிவிட்டன.

உண்மைதான் நமக்கு உதவ வருகின்ற எவரையும் உதாசீனம் செய்யவேண்டியதில்லைத்தான். ஆனால் அதன் மூலம் இருப்பதையும் இழந்துவிடுவோமா என்பதையும் யோசிக்கவேண்டும்.!

**-ஊர்க்குருவி.**

# பழங்களுக்கு இரசாயனம் பயன்படுத்தும் வியாபாரிகளுக்கு பூநகரியில் எச்சரிக்கை

கிளிநொச்சி, நவ. 14

பூநகரிச் சந்தைகளில் பழங்களைப் பழுக்கவைக்க இரசாயனங்களை நேரடியாகப் பிரயோகிக்கும் வியாபாரிகளைக் கண்டுபிடித்து எச்சரித்ததோடு, பாதுகாப்பாக பழுக்க வைக்கும் முறைமை குறித்தும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெளிவூட்டினர்.

பூநகரிப் பகுதியிலுள்ள பலசரக்கு வர்த்தக நிலையங்கள் மற்றும் பழவிற்பனை நிலையங்கள் மீது பொது சுகாதார பரிசோதகர்கள் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது பலசரக்குக் கடைகளின் களஞ்சியப் பகுதி மற்றும் விற்பனைப் பகுதிகளில் மாசடையும் வகையில் களஞ்சியப்படுத்தப்பட்ட பொருட்கள் அழிக்கப்பட்டதோடு, வழக்கு தாக்கல் செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

மேலும் பழவிற்பனை நிலையங்கள் சோதனையிடப்பட்ட போது, அங்கு பழங்களைப் பழுக்க வைக்கப் பயன்படுத்தும் இரசாயனங்கள் தெளிகருவிகளுடன் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், குறித்த பழ வியாபாரிகளுக்கு கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டதோடு, பாதுகாப்பான முறையில் பழங்களைப் பழுக்க வைக்கும் முறைகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 500,000 வாடிக்கையாளர்களின் மின் இணைப்புகள் துண்டிப்பு

கொழும்பு, நவ. 14

இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் வரை 500,000 இற்கும் அதிகமான வாடிக்கையாளர்கள் நிலுவைத் தொகையை செலுத்தத் தவறியதன் காரணமாக இலங்கை மின்சார சபை அவர்களின் மின்சார விநியோகத்தை துண்டித்துள்ளது.

மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் பொறியியலாளர் நோயல் பிரியந்த,

2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வரை பில்கள் செலுத்தப்படாமையின் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

நுகர்வோருக்கு 30 நாள் கடன் காலப் பயன்பாடும், தோராயமாக 10 நாட்களுக்கான அறிவிப்பும் வழங்கப்படுவதாகவும், அதன் பிறகு அவர்களின் இணைப்பு துண்டிக்கப்படுவதாகவும் நோயல் பிரியந்த விளக்கினார்.

மின்சார சபையின் பல்வேறு விதிமுறைகளுக்கு அமைவாகவே மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், வாடிக்கையாளர் நிலுவைத் தொகையை செலுத்தியவுடன் மின் இணைப்பு மீள வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# வெள்ளத்தில் சிக்கி கவிழ்ந்த லொறியில் திருட்டு

கொழும்பு, நவ. 15

கம்பஹா - ஜாஎல வீதியில் வெள்ளத்தால் சூழ்ந்துள்ள அகரவிட்ட பகுதியில் வெள்ளத்தில் சிக்கி கவிழ்ந்த லொறி ஒன்றில் இருந்து இரும்புகள் மற்றும் ஒட்சிசன் சிலிண்டர்கள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த லொறியானது பதுளை பிரதேசத்தில் இருந்து ஜாஎல நோக்கி இரும்புகள் மற்றும் ஒட்சிசன் சிலிண்டர்களை ஏற்றிச் சென்றுள்ளது.

வெள்ளத்தில் சிக்கிய இந்த லொறியை இரண்டு நாட்களாகியும் அகற்ற முடியாத நிலையில் மற்றொரு லொறியின் உதவியுடன் லொறியின் பொருட்களை அகற்ற முற்பட்டபோது ஐந்து இரும்புகள் மற்றும் ஏழு ஒட்சிசன் சிலிண்டர்கள் திருடப்பட்டுள்ளதாக லொறியின் உரிமையாளர் அடையாளம் கண்டுள்ளார்.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் லொறியின் உரிமையாளர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சரக்கு ரயில் பெட்டியை உடைத்து திரிபோசா திருடிய இருவர் கைது!

மட்டக்களப்பு, நவ. 14

மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சரக்கு ரயில் பெட்டியை உடைத்து 750 திரிபோச பைக்கெற்றுக்களை திருடிச் சென்ற இருவரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு பிராந்திய சுகாதார திணைக்களத்திற்கு திரிபோச பைக்கெற்றுக்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

இந்நிலையில், கடந்த 5ஆம் திகதி நிறுத்தி வைக்கப்பட்ட சரக்கு ரயில் பெட்டியை உடைத்து 750 திரிபோச பைக்கெற்றுக்கள் திருட்டுப்போயிருந்த நிலையில் 7ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து, திருடப்பட்ட திரிபோச பைக்கெற்றுக்களை இருவர் விற்பனை செய்துவருவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இந்நிலையில்,மட்டு தலைமையக பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஜி.எம். எஸ்.கயநாயக்க தலைமையிலான பொலிஸார் சம்பவதினமான நேற்று முன் தினம் இரவு கருவப்பங்கேணி மற்றும் கூழாவடி பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய இருவரை அவர்களது வீடுகளில் வைத்து கைது செய்ததுடன் திருடப்பட்ட சிறியளவிலான திரிபோச பைக்கெற்றுக்களை மீட்டனர். (அ)

# பறிக்கப்பட்ட காணிகள் மீண்டும் விவசாயிகளிடம்!

கொழும்பு, நவ. 14

பிரித்தானியர் காலத்தில் பாரம்பரிய சொத்துக்களை இழந்த விவசாயிகளுக்கு மீண்டும் அந்த விளைநிலங்கள் முழுமையாக வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



பாராளுமன்றத்தில் நேற்று வரவு-செலவு திட்டம் தொடர்பாக உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்படி 20 இலட்சம் குடும்பங்களுக்கு காணி மற்றும் விவசாய நில உரிமைகள் வழங்கப்படவுள்ளதுடன், 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக 2 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி கூறினார்.

2024ஆம் ஆண்டு இதனை ஆரம்பித்து சில வருடங்களில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

ஈழநாடு
Eelanadu 14.12.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், ஐப்பசி 28

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மல்கம் ரஞ்சித்தின் சுடலை ஞானம்

இலங்கைக்கான கர்தினால் மல்கம் ரஞ்சித் - இலங்கையில் ஜனநாயகத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக, சர்வதேச கத்தோலிக்க ஊடகமொன்றுக்கு குறிப்பிட்டிருக்கின்றார். இலங்கையின் ஜனநாயகம் கேள்விக்குள்ளாகி பல தசாப்தங்களாகின்றது. ஆனால், இப்போதுதான் மல்கம் ரஞ்சித்துக்கு, தனது நாட்டின், ஜனநாயகம் தொடர்பில் கேள்வி எழுந்திருக்கின்றது. இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே இலங்கையை ஒரு தோல்வியடைந்த நாடு என்று குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால் விடயம், அந்தத் தோல்விக்கான பொறுப்பாளிகளில் அவரும் ஒருவர்.

இலங்கை சுதந்திரம் அடைந்ததாகச் சொல்லப்படும் காலத்திலிருந்தே, இலங்கையின் ஜனநாயகம் கேள்விக்குள்ளாகிவிட்டது. ஒரு சக இனத்தை அடக்கி ஒடுக்கும் வழிமுறைகள் தொடர்பில் மட்டுமே சிங்கள ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தினர். இலங்கைத் தீவின் அதிகாரத்தை தங்கள் வசப்படுத்தவேண்டுமென்று எண்ணிய சிங்கள உயர் அடுக்கினர், அதிகாரத்திற்காக பௌத்தத்தை கருவியாக்கிக் கொண்டனர். இந்த ஜனநாயக விரோத பாரம்பரியத்தை ஆரம்பித்து வைத்தவர் எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்க ஆவார்.

அவரால் ஆரம்பிக்கப்பட்டதை பின்னர் வந்தவர்கள் அனைவரும் பின்பற்றினர். எந்தளவுக்கு ஜனநாயகத்தை மறுதலிக்கலாம், அதனை குழிதோண்டிப் புதைக்கலாம் என்பதிலேயே அனைவரும் கவனம் செலுத்தினர். தமிழ் மக்களின் ஜனநாயக கோரிக்கைகளை புறம்தள்ளுவதில் தங்களுக்குள் யார் வல்லவர்கள் என்பதில் ஒருவரோடு ஒருவர் மோதிக் கொண்டனர். தமிழ் மக்களுடன் சிறிய அதிகாரத்தைக் கூட பகிர்ந்து கொள்ளக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தனர். இந்த சிங்கள ஜனநாயக விரோத அரசியல் போக்கில் சந்திரிகா குமாரதுங்க சற்று மாறுபட்டுத் தெரிந்தாலும் கூட, அவராலும் பெரிய மாற்றங்கள் எதனையும் ஏற்படுத்திவிட முடியவில்லை.

இவ்வாறு இலங்கை தொடர்ந்தும் ஜனநாயக விரோதப் பாதையில் சென்றதன் விளைவாகவே, இன்று அதல பாதாளத்துக்குச் சென்றிருக்கின்றது. ஆனால், இந்தக் காலத்தில் தென்னிலங்கையை பிரதிநிதித்துவப்படுத்திய கத்தோலிக்க ஆயர் சமூகம், வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் எதிர்கொண்ட, ஜனநாயக விரோத செயல்களை ஒருபோதுமே கண்டித்ததில்லை. பயங்கரவாத முறியடிப்பு என்னுமடிப்படையில், தமிழ் மக்கள் என்னும் ஒரே காரணத்திற்காகவே மக்கள் கூட்டுத் தண்டனைகளுக்கு ஆளாகினர். தொடர்ந்தும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டனர்.

இன்றுவரையில் பயங்கரவாதச் தடைச் சட்டம் நீக்கப்படவில்லை. ஆனால் இவைகள் தொடர்பில் ஒருபோதுமே மல்கம் ரஞ்சித் வருத்தம் தெரிவித்ததில்லை. இறுதி யுத்தத்தின் போது, இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் கரிசனை கொண்டபோதும், அது தொடர்பில் மல்கம் என்றுமே சாதகமான அபிப்பிராயங்களை வெளியிட்டதில்லை. ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். ராஜபக்ஷக்கள் மீது மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டபோது, மல்கம் ராஜபக்ஷக்களோடு நெருக்கமான உறவை தொடர்ந்தார். ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பினனர்தான் மல்கம் ரஞ்சித்துக்கு திடீர் ஞானம் ஏற்பட்டது. ஜனநாயகம் தொடர்பில் போதனைகள் செய்ய முற்பட்டார்.

இலங்கையின் ஜனநாயக சீரழிவு என்பது, அதன் அனைத்து கட்டமைப்புக்களிலும் புரையோடிப்போயுள்ளது. அனைத்து துறைகளும் சீரழிவின் விளிம்பில் இருக்கின்றன. அனைத்துக்கும் ஜனநாயக விரோதப் போக்கே காரணம். இந்த ஜனநாயக விரோதப் போக்கிலிருந்து வெளியில் வரவேண்டுமாயின், தமிழ் மக்களின் அடிப்படையான பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும். தமிழ் மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்படாத வரையில், இலங்கையின் ஜனநாயகம் எப்போதுமே பரிகசிப்புக்குரிய ஒன்றுதான்.

## வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**

"ஒரு மரத்தை நடவு செய்வது பிரபஞ்சத்தின் லயத்துடன் உங்களை இணைத்துக் கொள்வதற்கான எளிதான வழியாகும்."

**- அமிற் றே (இந்திய ஆன்மீகக் குரு)**



# வடமராட்சி வலய மாணவர் பாராளுமன்றம்

*யாழ்ப்பாணம், நவ. 14*

வடமராட்சி கல்வி வலயம் நடத்தும் மாணவர் பாராளுமன்ற நிகழ்ச்சி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மாநாட்டு மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் கனகசபை சத்தியபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ)

# வெள்ளத்தில் மூழ்கியது திருமலை!

*திருமலை, நவ. 14*

திருகோணமலையில் கடந்த சிலநாட்களாக பெய்துவரும் காற்றுடன் கூடிய மழையின் காரணமாக பல தாழ்நிலப்பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பெய்த காற்றுடன்கூடிய மழையின் காரண மாக வெருகல் ஊப்பூரல் கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஆறு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப்பணிப்பாளர் குகதாஸ் சுகுணதாஸ் தெரிவித்தார்.

மேலதிக சேதங்கள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.



அத்துடன் திருகோணமலை நகரை அண் மித்த கன்னியா பீலியடி பகுதி உட்பட பல பகுதிகளில் வெள்ள நீர் உட்புகுந்துள்ளதன் காரணமாக பல வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வடிகான் அமைக்கப்படாததன் காரணமாக வெள்ள நீர் வீட்டுக்குள் புகுந்துள்ளதாகவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பல முறை தெரிவித்தும் இது வரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் தெரிவித்தனர். (அ)

# தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் நடந்த கௌரிவிரத இறுதி நாள் நிகழ்வு

*யாழ்ப்பாணம், நவ. 14*

கேதார கௌரி விரதத் தின் இறுதி நாளான நேற்று கேதார கௌரி அம்பாளின் காப்பு கட்டும் நிகழ்வு யாழ் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத்தில் இடம்பெற்றது.

நேற்று காலை 8 மணியளவில் ஆரம்பமான பூசை வழிபாடுகளை தொடர்ந்து முற்பகல் 10 மணியளவில் அடியார்களுக்கு கௌரி நோன்பு நூல் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் பல்வேறு பகுதிகளிலுமிருந்து பக்தர்கள் வருகை தந்திருந்தனர். (அ)



# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**நவம்பர் - 14 செவ்வாய்க்கிழமை**
**சோபகிருது வருடம் - ஐப்பசி 28**
**நல்ல நேரம் : 07.30 - 09.00**
**ராகு காலம் : 03.00 - 04.30**
**திதி : பிரதமை**




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதம் வந்து போகும். தாயாரின் உடல்நிலை சீராகும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் ஆதரிப்பார்கள். நிம்மதி உண்டாகும் நாள்.

**இடபம்**
எதிர்பாராத தனவரவு உண்டு. உங்களால் மற்றவர்கள் ஆதாயமடைவார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

**மிதுனம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் சில முக்கிய ஆலோசனைகள் தருவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கடகம்**
பால்ய நண்பர்கள் தேடி வருவார்கள். வியாபாரத்தில் தள்ளிப்போன வாய்ப்புகள் தேடி வரும். புதிய வாகனங்கள் வாங்குவீர்கள். முன்னேறுவீர்கள். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**சிம்மம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள்வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**கன்னி**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். நண்பர்களால் ஆதாயம் பெருகும். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். புது வாய்ப்புகள் வரும்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**விருட்சிகம்**
எதையும் திட்டமிட்டு செய்ய பாருங்கள். உடல்நிலை பாதிக்கும். வாகனம் அடிக்கடி செலவு வைக்கும். வியாபாபரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். பொறுப்புகள் கூடும். நிதானம் வேண்டிய நாள்.

**தனுசு**
குடும்பத்தினருடன் மனம்விட்டு பேசுவீர்கள். நவீன சாதனங்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். இனிமையான நாள்.

**மகரம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிந்தனை திறன் பெருகும் நாள்.

**கும்பம்**
உணர்ச்சிப் பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம்பெறுவீர்கள். மதிக்கப்படுவீர்கள். சாதிக்கும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உணர்ச்சிவசப்படாமல் இருங்கள் இரண்டாவது முயற்சியில் சில காரியங்கள் முடியும். வேலைச் சுமை குறையும். கடினமாக உழைக்க வேண்டிய நாள்.

# உயிர் சேதம் இல்லாத உற்சாகமான தீபாவளி!

சென்னை, நவ. 14

தமிழகத்தில் உயிர்சேதம் எதுவுமில்லாமல் தீபாவளி கொண்டாட்டம் உற்சாகமாக நடந்து முடிந்துள்ளது.

இது தொடர்பாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாவது:-

தீபாவளி கொண்டாட்டத்தின் போது பட்டாசு வெடிப்பதில் தீக்காயத்தால் ஏற்படும் பாதிப்புகளை தவிர்ப்பதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது.

கடந்த 2020ஆம் ஆண்டு 15 பேருக்கு தீக்காயம் ஏற்பட்டது. ஒருவர் உயிரிழந்தார். 2021இல் 30 பேருக்கு தீக்காயம் ஏற்பட்டு உயிர்சேதம் ஏதும் ஏற்படவில்லை. கடந்த ஆண்டும் 38 பேருக்கு தீக்காயம் ஏற்பட்டு உயிரிழப்பு இல்லை.

இரண்டு ஆண்டுகளாக உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்ட நிலையில் இந்த ஆண்டும் உயிரிழப்பு இல்லாமல் தடுக்க தீவிரமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழகம் முழுவதும் 95 அரசு மருத்துவமனைகளில் மொத்தம் 750 படுக்கைகளும் சிறப்பு தீக்காயம் விடுதிகளும் அமைக்கப்பட்டிருந்தன.

சென்னை கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரியில் மட்டும் லேசான தீக்காயங்களுடன் 15 பேர் அனுமதிக்கப்பட்டு உள்ளார்கள். தமிழகம் முழுவதும் 30 பேருக்கு தீக்காயம் ஏற்பட்டுள்ளது. பெரிய அளவில் பாதிப்போ உயிர்சேதமோ ஏற்படவில்லை. உயிரிழப்பு இல்லாமல் தீபாவளி கொண்டாட்டம் உற்சாகமாக நடந்து முடிந்தது-என்றார். (அ)

# தமிழகத்தில் 6 நாட்கள் பரவலாக மழை

சென்னை, நவ. 14

தமிழகத்தில் 6 நாட்களுக்கு பரவலாக மழையும், ஒரு சில இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில், தென்கிழக்கு வங்கக் கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி வரும் இன்று உருவாகக்கூடும். கிழக்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, இன்று தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

இன்று மற்றும் நாளை, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

16 ஆம் திகதி முதல் நவ.18 ஆம் திகதி வரை தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என வானிலை மையம் தெரிவித்துள்ளது.

(அ)

# குன்னூரில் வீட்டுக்குள் புகுந்த சிறுத்தை!

குன்னூர், நவ. 14

குன்னூரில் வீட்டுக்குள் புகுந்த சிறுத்தை, ஒரு நாள் முழுவதும் வீட்டினுள் பதுங்கியிருந்தால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்தனர். நள்ளிரவில் வீட்டிலிருந்து சிறுத்தை வெளியேறியதாக வனத்துறையினர் உறுதிப்படுத்தினர்.

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே உள்ள புருக்லாண்ட் பகுதியில் உள்ள வீட்டில் வளர்க்கும் நாயை துரத்திக்கொண்டு வந்த சிறுத்தை அப்பகுதியில் உள்ள வீட்டினுள் புகுந்தது. உடனடியாக குன்னூர் வனத்துறையினர் மற்றும் தீயணைப்பு மீட்பு குழுவினருக்கு பொதுமக்கள் தகவல் தெரிவித்தனர்.

வீட்டில் இருந்தவரை காப்பாற்ற சென்ற, மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் உட்பட 6 பேரை சிறுத்தை தாக்கியது. காயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

வனத்துறையினருக்கு தகவல் கிடைத்ததும் வனத்துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து சிறுத்தையை பிடிக்கும் பணியில் ஈடுபட்டனர். வீட்டுக்குள் பதுங்கிய சிறுத்தை வீட்டை விட்டு வெளியேறவில்லை.

இதனால், வனத்துறையினர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

சிறுத்தை வீட்டின் ஒரு அறையில் பதுங்கி இருப்பதை, வீட்டின் ஓட்டை பிரித்துப் பார்த்த போது தெரியவந்தது. எனவே, சிறுத்தை வெளியேற வீட்டின் கதவுகளை திறந்து வீட்டு, கண்காணிப்பு கமெராக்களை பொருத்தி கண்காணித்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு சிறுத்தை வீட்டை விட்டு வெளியேறிவிட்டதாக வனத்துறையினர் தெரிவித்தனர்.

(அ)

# கோவைக்கு வெடிகுண்டு மிரட்டல்!

சென்னை, நவ. 14

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சென்னை, கோவை உள்பட தமிழகம் முழுவதும் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருந்தது. மக்கள் கூடும் கடை வீதிகளில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்தநிலையில் சென்னையில் உள்ள டி.ஜி.பி. அலுவலகத்துக்கு தீபாவளிக்கு முந்தைய நாளான இரவில் ஒரு மிரட்டல் ஈ-மெயில் சென்றது. அதில் கோவையில் பல்வேறு இடங்களில் பெற்றோல் குண்டு வெடிக்கும் என மிரட்டல் விடுக்கப்பட்டு இருந்தது.

இந்த தகவல் கோவை மாநகர பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்த அனைத்து பொலிஸாரும் உஷார்படுத்தப்பட்டனர். இரவு விடிய, விடிய வாகன சோதனை நடத்தப்பட்டது. பஸ் நிலையம், ரெயில் நிலையம் உள்பட முக்கிய இடங்களில் போலீசார் சோதனையில் ஈடுபட்டனர். ஆனால் சந்தேக நபர்கள் யாரும் சிக்கவில்லை.

இதற்கிடையே மிரட்டல் மெயில் குறித்து சைபர் கிரைம் பொலிஸார் விசாரணையில் இறங்கினர். அந்த இ-மெயில் விருதுநகர் மாவட்டம் சாத்தூரைச் சேர்ந்த இசக்கி என்பவரின் பெயரில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. பொலிஸார் உடனடியாக அவரை பிடித்து விசாரித்தனர். ஆனால் அவர் தனக்கும், மிரட்டலுக்கும் சம்பந்தமில்லை என தெரிவித்தார்.

இசக்கியின் இ-மெயில் ஐ.டி.யை மர்ம நபர்கள் அவருக்கு தெரியாமல் பயன்படுத்தி மிரட்டல் விடுத்து இருந்தது தெரியவந்தது. அவ்வாறு மிரட்டல் விடுத்த நபர் யார், எதற்காக இவ்வாறு மிரட்டல் விடுத்தனர் என்பது பற்றி விசாரித்து அவரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (அ)

# வரவு-செலவுத்திட்ட யோசனையை முன்கூட்டியே கசிய விட்டவர் யார்?

## கேள்வி எழுப்புகிறார் ஹர்ச டி சில்வா

கொழும்பு, நவ. 14

**வரவு-செலவுத்திட்ட யோசனைகள் பாராளுமன்றத்தில் வாசிக்கப்படுவதற்கு முன்னர் கசியவிடயப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.**

ருவிட்டரில் அவர் இது தொடர்பாக பதிவிட்டுள்ளார்.

வரவு-செலவுத்திட்ட யோசனைகள் பாராளுமன்றத்தில் வாசிக்கப்படுவதற்கு முன் கூட்டியே கசியவிட்டவர் யார் ?

பாராளுமன்றத்தில் அமர்ந்திருந்தவேளை எனக்கு இது குறித்த தகவல் கிடைத்தது. நான் அதனை பார்க்கவில்லை.

பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் இது குறித்து வினவியவேளை, அவர் அரசாங்க அச்சுக் கூட்டுத்தாபனத்திலிருந்து வருவதாக தெரிவித்தார் என ஹர்ச டிசில்வா குறிப்பிட்டுள்ளார். (அ)



# கீரி சம்பா அரிசி பதுக்கி வைத்தவருக்கு அபராதம்

## அரிசியும் பறிமுதல் செய்யப்பட்டது

கொழும்பு, நவ. 14

3,54,000 பெறுமதியான 1,365 கிலோ கிராம் கீரிச் சம்பா அரிசியை பதுக்கி வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்ட பல்பொருள் வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவருக்கு அத்தனகல்ல திவான் மஞ்சுள கருணாரத்ன ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதித்ததுடன் அரிசியைப் பறிமுதல் செய்யவும் உத்தரவிட்டார்.

நிட்டம்புவ நகரிலுள்ள பல்பொருள் அங்காடி நிலைய உரிமையாளர் ஒருவருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டது.

அபராதத்தைச் செலுத்தா விட்டால் 6 மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்றும் உத்தரவிடப்பட்டது. (அ)





# ஜப்பான் தூதுவரை கொழும்பில் சந்தித்த வடக்கு மாகாண ஆளுநர்

கொழும்பு, நவ. 14

வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் ஜப்பான் தூதுவர் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் உள்ள ஜப்பான் தூதுவரின் இல்லத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் வட மாகாணம் தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

ஜப்பான் அரசின் சார்பில், வடபகுதியின் வளர்ச்சிக்கு முழு ஒத்துழைப்பு தொடர்ந்தும் வழங்கப்படும் என்று தூதர் உறுதி அளித்தார். (அ-2)

# தீ பரவலில் பெண் பலி!

கொழும்பு, நவ. 14

பன்விலதன்ன - லோராவத்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் ஏற்பட்ட தீ பரவலில் மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளதாக லோராவத்த பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் 94 வயது மூதாட்டி ஆவார். இவர் தனியாக வீட்டில் வசித்து வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த மூதாட்டியின் மகன் மற்றும் உறவினர்கள் தீ பரவலை அவதானித்து சம்பவ இடத்துக்குச் சென்று தீயணைப்பில் ஈடுபட்ட போது மூதாட்டி சடலமாக கிடந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறெனினும் தீ பரவலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இந்த சம்பவம் தொடர்பில் லோராவத்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

யாழ்.பல்கலை முள்ளிவாய்க்கால் தூபி விவகாரம்

# முகநூலில் பதிவிட்டவருக்கு எதிராக பேராசிரியர்கள் இருவர் முறைப்பாடு!

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ். பல்கலைக்கழகத்திலுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி தொடர்பாக முகநூலில் போடப்பட்ட பதிவு தொடர்பாக நபரொருவருக்கு எதிராக பல்கலைக்கழக பேராசிரியர்கள் இருவரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி தற்பொழுது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் கடமையாற்றும் சண்முகநாதன் பிரதீபன் என்ற நபருக்கு எதிராகவே இணைய வழி ஊடாக பொலிஸ் மா அதிபருக்கும், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இணையத்தில் அவதூறு பரப்பியமை தொடர்பிலேயே முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பேராசிரியர் ரங்கநாதன் கபிலன் பொலிஸ் மா அதிபருக்கு முறைப்பாடு பதிவு செய்துள்ளதுடன், பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனடிப்படையில் குறித்த நபரை காங்கேசன்துறையில் உள்ள பொலிஸாரின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு அலுவலகத்துக்கும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கும் விசாரணைக்கு ஆஜராகுமாறு பொலிஸாரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் உள்ளிட்ட இருவர் மேற்கொண்ட முறைப்பாடுகளையடுத்து அது தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு விசாரணைகள் ஆரம்பித்துள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தது.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் போடப்பட்ட முகநூல் பதிவு தொடர்பாகவே பொலிஸ் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது. (அ)

# சனத் நிஷாந்தவின் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஜன.31 இல்

கொழும்பு, நவ. 14

நீதிமன்றத்தை அவமதித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மூன்று மனுக்களை எதிர்வரும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இந்த மனுக்கள் நேற்று சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம மற்றும் மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் மற்றும் பிரதிவாதி சரத் நிஷாந்த ஆகியோர் முன்வைத்த வாதங்களை பரிசீலித்த நீதிபதிகள், மனுவை எதிர்வரும் ஜனவரி 31ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் திகதியை அறிவித்தனர்.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, பிரதிவாதி சனத் நிஷாந்த நீதிமன்றில் முன்னிலையாகியதுடன், சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், பிரதிவாதி சனத் நிஷாந்தவுக்கு மீண்டும் அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டது.

கடந்த ஒகஸ்ட் 25ஆம் திகதி பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில், பொதுமக்கள் போராட்டத்தின்போது நீதிவான்கள் பிணை வழங்குவதில் கடைப்பிடித்த நடைமுறையை விமர்சித்து இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த நீதிமன்றத்தை அவமதித்ததாக 3 மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கை நீதித்துறை அதிகாரிகள் சங்கம், பிரியலால் சிறிசேன மற்றும் விஜித குமார ஆகிய இரு சட்டத்தரணிகளினால் இந்த மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (அ)

# அலுவலக ரயிலில் கோளாறு

கொழும்பு, நவ. 14

பிரதான பாதையில் மீரிகமவிற்கும் அம்பேபுஸ்ஸவிற்கும் இடையில் நேற்றுக் காலை அலுவலக ரயிலில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதாக ரயில்வே கட்டுப்பாட்டு அறை அலுவலகம் தெரிவித்துள்ளது.

ரம்புக்கனையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த இந்த ரயிலில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக அலுவலக ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் ஏனைய பயணிகள் கடும் சிரமத்திற்குள்ளாகினர்.

தொழில்நுட்பக் கோளாறினால் பாதிக்கப்பட்ட ரயிலை மீட்டெடுக்கும் பணி நடைபெற்று வருவதாக ரயில்வே கட்டுப்பாட்டு அறை தெரிவித்தது. (அ)

# மேன்முறையீட்டு நீதிமன்றம் செல்கின்றார் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான்!



கொழும்பு, நவ. 14

**சிறிலங்கா கிரிக்கெட் இடைக்கால குழுவுக்கு விதிக்கப்பட்டுள்ள இடைக்கால தடை தொடர்பில் ஆராய மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு செல்லவுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.**

அங்கு உரிய தீர்வு கிடைக்கவில்லையாயின், உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சிறிலங்கா கிரிக்கெட் நிர்வாகத்திற்காக இடைக்கால நிர்வாக குழுவொன்றை நியமித்து விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை நடைமுறைப்படுத்துவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அண்மையில் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்தது.

கிரிக்கெட் சபைத் தலைவர் ஷம்மி சில்வா தாக்கல் செய்த நீதி பேராணை மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதையடுத்து, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதனைவிட, இடைக்கால நிர்வாகக் குழுவின் உறுப்பினர்கள் அந்த பதவிகளில் பணியாற்றுவதைத் தடுக்கும் வகையிலும், விளையாட்டுத்துறை அமைச்சர் உள்ளிட்ட பிரதிவாதிகள் கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரிகளின் நடவடிக்கைகளில் தலையிடுவதைத் தடுக்கும் வகையிலும் மேலும் 2 தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த மூன்று இடைக்கால தடை உத்தரவுகளும் 14 நாட்களுக்கு அமுலில் இருக்கும் நிலையில் இந்த மனு எதிர்வரும் 16 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

2022ஆம் ஆண்டு இடம்பெற்ற இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடரில் சிறிலங்கா கிரிக்கெட் நிர்வாகக் குழு மேற்கொண்ட ஊழல், முறைகேடுகள் மற்றும் சந்தித்த கடுமையான தோல்விகள் குறித்து கணக்காய்வாளர் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டது.

இந்தநிலையில், சிறிலங்கா கிரிக்கெட் நிர்வாகக் குழுவை இடைநிறுத்தி, இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க தலைமையில் இடைக்கால நிர்வாகக் குழுவொன்றை விளையாட்டுத்துறை அமைச்சர் நியமித்திருந்தார். (அ)

# கொழும்பு துறைமுகத்தில் சொகுசு கப்பல்



கொழும்பு, நவ. 14

பஹாமாஸ் கொடியுடனான ரிசிலியண்ட் லேடி என்ற சொகுசு கப்பல் நேற்று காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

278 மீற்றர் நீளம் கொண்ட இந்த கப்பல் 2 ஆயிரத்து 324 பயணிகள் மற்றும் ஆயிரத்து 145 பணியாளர்களுடன் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளது.

குறித்த கப்பல் நேற்று மாலை தாய்லாந்து நோக்கி புறப்பட்டதாக தகவல்கள் தெரிவித்தன.

இந்த கப்பலின் பயணிகள், காலி மற்றும் கொழும்பின் பல பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

# சிறுவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகக் கூறி தாயிடம் பணம் கோரிய போலி ஆசிரியர் விளக்கமறியலில்!

கொழும்பு, நவ. 14

தன்னை ஆசிரியர் எனக் கூறி சிறுவன் ஒருவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சிறுவனின் தாயாரிடம் தொலைபேசியில் பணம் கோரிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை இன்று செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு மேலதிக நீதிவான் பசன் அமரசிங்க உத்தரவிட்டார்.

சந்தேக நபர் கொழும்பு ரோயல் கல்லூரியின் ஆசிரியர் என தன்னை அறிமுகப்படுத்தி சிறுவனின் தாயிடம் ஒன்றரை இலட்சம் ரூபா பணம் கோரியுள்ளதாக கறுவாத்தோட்டம் பொலிஸார் கொழும்பு மேலதிக நீதிமன்றத்தில் குற்றச்சாட்டை சமர்ப்பித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் மஹியங்கனை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவராவார்.

இவர் கடந்த 27ஆம் திகதி காலை 8.40 மணியளவில் குறித்த பெண்ணிடம் தொலைபேசி அழைப்பின் மூலம் தனது மகன் அவசர சத்திர சிகிச்சை காரணமாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும், அதற்காக ஒன்றரை இலட்சம் ரூபா வைப்பிலிடுமாறும் கூறியுள்ளார்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட தாயின் கணவர் குருந்துவத்தை பொலிஸில் முறைப்பாடு செய்த நிலையில் சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (அ)

# மத்திய சுற்றாடல் அதிகார சபை முன்னாள் தலைவருக்குப் பிணை

கொழும்பு, நவ. 14

100 இலட்சம் ரூபாவை இலஞ்சம் பெற முயன்றபோது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மத்திய சுற்றாடல் அதிகார சபையின் முன்னாள் தலைவர் சுபுன் பத்திரகேவை பிணையில் விடுவிக்க கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டது.

25,000 ரூபா ரொக்கப் பிணையிலும் மற்றும் 25 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளும் அவரை விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஏனைய இரு சந்தேக நபர்களும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ)

# மழை குறைவடையும்!

கொழும்பு, நவ. 14

தற்போது காணப்படும் மழையின் நிலைமை சிறிதளவு குறைவடையக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, நாட்டைச் சூழவுள்ள தாழ்வான வளிமண்டலத்தின் கொந்தளிப்பான தன்மை இன்றும் தொடரும் என அதன் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டை சுற்றியுள்ள தாழ்வான வளிமண்டலத்தில் கொந்தளிப்பான தன்மை காணப்படுகிறது.

இந்த கொந்தளிப்பான தன்மை காரணமாக, நாட்டின் வடக்கு, மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் காலை வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

எவ்வாறாயினும், மாலை அல்லது இரவு வேளைகளில் நாடு முழுவதும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

அதிலும் பலத்த மழையை எதிர்பார்க்கிறோம்.

மேற்கு, சப்ரகமுவ, தெற்கு, மத்திய, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் 100 மி.மீ. வரையிலான மழைவீழ்ச்சி பதிவாகும் வாய்ப்பு உள்ளது.

இந்த மழையின் தன்மை தற்காலிகமானது. குறிப்பாக பலத்த காற்று வீசுகிறது. கூடுதலாக இடி மின்னல்கள் மூலம் விபத்துகள் ஏற்படும் சூழ்நிலைகள் உள்ளன.

இன்றும், நாளையும் இது தான் நிலை. எதிர்வரும் 15ஆம், 16ஆம் திகதிக்குள் மழையின் அளவு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும் மாலை அல்லது இரவு நேரங்களில் மழை நிலைமை அப்படியே இருக்கும் -என்றார். (அ)

# பொலிஸாரால் கைதான சந்தேக நபர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 14

சட்டவிரோத மதுபானத்துடன் தொடங்கொடை பொலிஸாரால் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டவர் உயிரிழந்துள்ளதாக தொடங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

தொடங்கொடை வெனிபெல்கட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட நபர் தனக்கு நெஞ்சு வலிப்பதாக கூறியதையடுத்து பொலிஸார் களுத்துறை நாகொடை வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் அவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இந்த மாதம் மட்டும் 198 மில்லியன் ரூபா மதுவரி நிலுவையை பெற்ற அரசாங்கம்

கொழும்பு, நவ. 14

மதுவரி நிலுவைத் தொகையை செலுத்தத் தவறிய மதுபான உற்பத்தி நிறுவனங்களின் உரிமம் இரத்து செய்யப்பட்டதன் காரணமாக அரசாங்கம் இந்த மாதம் 198 மில்லியன் மதுவரி நிலுவையை பெற்றுள்ளதாக பாராளுமன்ற வழிவகைகள் பற்றிய குழுவின் தலைவர் பாட்டளி சம்பிக ரணவக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், மதுவரி நிலுவையை செலுத்த தவறியவர்களின் உரிமம் இரத்து செய்யப்பட வேண்டும் எனும் பரிந்துரையின் காரணமாக பல நிறுவனங்கள் நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு ஒப்பந்தம் செய்துள்ளதுடன், 2023ஆம் ஆண்டுக்கான மது வரி நிலுவைத் தொகையை செலுத்தத் தொடங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, 2023 ஆம் ஆண்டுக்கான நிலுவைத் தொகையாக 1.1 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த தொகையினை எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக ஒன்பது தவணைகளில் கட்டணங்களை செலுத்துவதற்கு நான்கு நிறுவனங்கள் ஒப்புக்கொண்டுள்ளன.

இதற்கமைய, குறித்த நான்கு நிறுவனங்களும் கடந்த 6 ஆம் திகதி 198 மில்லியன் ரூபாவை செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து, எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்குள் மீதமுள்ள 1,56 பில்லியன் ரூபா வரியை செலுத்துவதாக குறித்த நிறுவனங்கள் ஒப்புக்கொண்டுள்ளதாக பாராளுமன்ற வழிவகைகள் பற்றிய குழுவின் தலைவர் பாட்டளி சம்பிக ரணவக்க தெரிவித்தார். (அ)

# வெளிநாட்டிலிருந்து அனுப்பப்பட்ட பணம் மூலம் இலங்கைக்கு 517.4 மில்லியன் அமெரிக்க டொலர்!

கொழும்பு, நவ. 14

ஒக்ரோபர் மாதத்தில் வெளிநாட்டு பணவனுப்பல் மூலம் 517.4 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார ருவிட்டர் பதிவொன்றில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், தாம் அமைச்சராக கடமைகளை பொறுப்பேற்ற, 2022 ஆம் ஆண்டு மே



மாதம் முதல் இந்த வருடத்தின் ஒக்ரோபர் மாத இறுதி வரை, வெளிநாட்டு பணவனுப்பல் மூலம் 7.6 பில்லியன் அமெரிக்க டொலர் பெறப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். (அ)

# கனடாவை தொடர்ந்தும் தாக்கி பேசும் அலி சப்ரி!

**கொழும்பு, நவ. 14**

**கனடா மீதான தனது எதிர்ப்பையும், மனித உரிமைகள் மீதான அந்நாட்டின் இரட்டை நிலைப்பாட்டையும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வெளிப்படுத்தியுள்ளார்.**

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பில் கனடா உண்மையான அக்கறை காட்டவில்லை எனவும் மாறாக வாக்கு வங்கி அரசியலில் மட்டுமே கவனம் செலுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் விடுத்துள்ள பதிவொன்றில் அவர் இதனை கூறியுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கிழக்கு ஜெருசலேம் உட்பட ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பிரதேசத்திலும், ஆக்கிரமிக்கப்பட்ட சிரிய கோலானிலும் குடியேற்ற நடவடிக்கைகளைக் கண்டிக்கும் ஐ.நா தீர்மானத்திற்கு எதிராக கனடா வாக்களித்ததை தனது சமீபத்திய வலைத்தளப் பதிவில் அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார்.

"கனடா எப்படி வாக்களித்தது என்று பாருங்கள், பாசாங்குத்தனமான இரட்டைத் தரத்தைப் பார்க்கிறீர்களா?, அவர்கள் இலங்கையில் மனித உரிமைகள் மீது உண்மையான அக்கறை கொண்டவர்கள் என்று நீங்கள் நினைத்தால், நீங்கள் துரதிர்ஷ்டவசமாக தவறாக நினைக்கிறீர்கள்! எல்லா வழிகளிலும் வாக்கு வங்கி அரசியல்தான்!" என அவர் குறிப்பிட்டுள்ளார்.



ஐ.நா தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்த 145 நாடுகளில் இந்தியாவும் அடங்கும். நவம்பர் 9ஆம் திகதி குறித்த தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## விஸா காலம் நீடிக்கப்படாமையினால் ஜோர்தானில் 200 இலங்கையர் பாதிப்பு

கொழும்பு, நவ. 14

விஸா காலம் நீடிக்கப்படாமையினால் ஜோர்தானிலுள்ள தொழிற்சாலையொன்றில் பணிபுரியும் சுமார் 200 இலங்கைப் பணியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த இலங்கையர்கள் தற்போது ஜோர்தானின் சஹாப் பிலுள்ள அல் ஜூமாத் கைத்தொழில் வலயத்திலுள்ள அசீல் என்ற தொழிற்சாலையில் பணிபுரிந்து வருகின்றனர்.

விசா காலம் நீடிக்கப்படாமை உள்ளிட்ட மேலும் பல பிரச்னைகளை தாம் எதிர்கொள்வதாக அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (அ)

## யாழில் 4,000 நாய்களுக்கு தடுப்பூசி!

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் சுமார் 4,000 நாய்களுக்கு விசர் நோய் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட 08 பொது சுகாதார பரிசோதகர் பிரிவிலும் உள்ள வளர்ப்பு நாய்கள் மற்றும் வீதியில் கட்டாக்காலி நாய்களாக திரிந்த நாய்கள் என 3, 983 நாய்களுக்கு ஏ.ஆர். வி தடுப்பூசி செலுத்துப்பட்டுள்ளது.

அதேவேளை 290 பெண் நாய்களுக்கு கருத்தடை சத்திர சிகிச்சையும் செய்யப்பட்டுள்ளதாக என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (அ)

# 35 வீதமான ஆண்கள் மது அருந்துகின்றனர்!

கொழும்பு, நவ. 14

இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் தொகையில் முப்பத்தைந்து வீதமானவர்கள் மதுபானம் பயன்படுத்துவதாக மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இலங்கையில் தனிநபர் மதுபாவனை 4.3 லீற்றராக பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், மது அருந்துபவர்களின் தனிநபர் நுகர்வு 18.9 லீற்றராக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் தமது வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கை மதுபான பாவனைக்கு பயன்படுத்துவதாக தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், நாட்டின் வருமானத்தை அதிகரிக்க வேண்டுமாயின் மதுபானம் மீதான வரியை அதிகரிக்க வேண்டுமெனவும், அதன் மூலம் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியும் என மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் வலியுறுத்தியுள்ளது.

மதுபானங்களின் விலையை குறைத்து விற்பனை நிலையங்களை அதிகரித்தல் மற்றும் சட்டவிரோத மதுபான அதிகரிப்பால் வரியை அறவிட முடியாது என கூறும் விஞ்ஞானப்பூர்வமற்ற வாதங்களுக்கு அரசாங்கம் ஏமாறக்கூடாது எனவும் அறிவுறுத்தியுள்ளது.

இதன்படி, சட்டவிரோத மதுபான நுகர்வு இல்லாதொழிக்கப்பட வேண்டும் எனவும், அதற்காக செயற்படும் நிறுவனங்கள் பலப்படுத்தப்பட வேண்டும் எனவும் மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் வலியுறுத்தியுள்ளது. (அ)

# சீனா வழங்கும் ஆதரவு டிஜிற்றல் கல்வியை மேலும் வலுப்படுத்தும்!

### அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நம்பிக்கை


கொழும்பு, நவ. 14

கல்விச் சீர்திருத்தங்களால் இயங்கும் டிஜிற்றல் கல்வியை மேலும் வலுப்படுத்த சீனாவின் ஆதரவு எதிர்பார்க்கப்படுவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

சீனக் குடியரசின் கல்வி அமைச்சருடனான விசேட சந்திப்பைத் தொடர்ந்து, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இவ்வாறு கூறினார்.

இச்சந்திப்பின்போது இலங்கையின் கல்வித்துறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்ற யுனெஸ்கோ பொது மாநாட்டின் 42ஆவது அமர்வில் பங்கேற்ற பின்னர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சீனக் கல்வி அமைச்சரை சந்தித்துள்ளார்.



அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சீனாவின் ஹூவாவி நிறுவனத்துடன் இலங்கையின் கல்வியை டிஜிற்றல் மயமாக்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

சீனக் கல்வி அமைச்சருடன் இதனை நினைவு கூர்ந்த அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, இலங்கையில் பாடசாலைகளை டிஜிற்றல் மயமாக்குவதற்கான மூலோபாய பங்காளியாக ஹூவாவி நிறுவனம் முன்னிலையில் இருப்பதாக கூறியுள்ளார். (அ)

# நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 14

நாட்டின் இருவேறு பிரதேசங்களில் நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் காணாமல் போயுள்ளார்.

நிவித்திகல கப்புறுவத்த, கரவிட்ட பகுதியில் கினிபொக்கு எல ஆற்றில் நீராடச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

அதே பகுதியைச் சேர்ந்த 40 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனிடையே, கொஸ்வத்த, பலுவெல்ஹார பகுதியில் கொஸ்வத்து ஓயாவில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

பலுவெல்ஹார பகுதியைச் சேர்ந்த 23 வயதான இளைஞர் ஒருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## கொலன்னாவ எண்ணெய் களஞ்சிய முனையத்தில்மீண்டும் சி.சி.ரி.வி. கமெரா பொருத்த நடவடிக்கை!

கொழும்பு, நவ. 14

கொலன்னாவ எண்ணெய் களஞ்சிய முனைய வளாகத்தில் சிசிடிவி கமெரா பொருத்தும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

12 கோடியே எழுபது இலட்சம் ரூபா செலவில் குறித்த திட்டம் முன்னெடுக்கப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

இதன்படி, கொலன்னாவ எண்ணெய் களஞ்சிய முனைய வளாகத்தில் ஏற்கனவே பாதுகாப்பு கமெராக்கள் பொருத்தப்பட்டுள்ள நிலையில், மீண்டும் கமெராக்கள் பொருத்துவதற்கு அதிகளவில் பணம் செலவிடப்போவதாக முனையத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

90 ஏக்கர் பரப்பளவுள்ள குறித்த பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பாதுகாப்பு படையினர் மற்றும் இராணுவத்தினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் 50 இலட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட ட்ரோன் கமெரா தற்போது பயன்படுத்தப்படாமல் உள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சி.சி.ரி.வி கமெராக்களை பொருத்துவதற்கு செலவிடப்படும் பணம் குறித்து உடனடியாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# 50 ஆயிரம் குடும்பங்களுக்கு கொழும்பில் வீட்டு உரிமை!

கொழும்பு, நவ. 14

2024ஆம் ஆண்டில் கொழும்பில் சுமார் 50,000 குடும்பங்களுக்கு வீட்டு உரிமைகள் வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் நேற்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி இதனை பாராளுமன்றில் சமர்ப்பித்தார்.

இதன்போதே, அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன், கொழும்பு தோட்ட மக்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்த புதிய வேலைத்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி கூறினார். (அ)

# அம்பிட்டிய தேரருக்கு எதிராக சட்ட நடவடிக்கை இல்லையா?

## ஹரீஸ் எம்.பி கேள்வி



மட்டக்களப்பு, நவ. 14

**மட்டக்களப்பு விகாரதிபதிக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்காமை ஏமாற்றமளிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடமாகாண மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டும்.

மட்டக்களப்பு விகாராதிபதியாக இருக்கும் அம்பிட்டிய தேரர் அவர்கள் தமிழ் மக்களை துண்டுதுண்டாக வெட்ட வேண்டும், கொல்ல வேண்டும் என்று மிகக்கேவலமான முறையில், மிகமோசமாக தமிழ் மக்கள் தொடர்பில் பகிரங்கமாக பேசியிருக்கிறார்.

இதனை யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாது. இவருக்கு எதிராக எந்தவொரு சட்டநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனால் இலங்கையின் ஒட்டுமொத்த தமிழ் சமூகமும் வேதனையில் ஆழ்ந்துள்ளது. தேரரின் இந்த கருத்தை முஸ்லிம் சமூகமும், சிங்கள சமூகமும் வெட்கக்கேடாக நோக்குகிறது.

இவ்வாறான வன்மமான பேச்சுக்கள் தடைசெய்யப்பட வேண்டும்-என்றார். (அ)

## தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் மரங்கள் நாட்டி வைப்பு



அம்பாறை, நவ. 14

இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழக வளாகத்தில் 500 நிழல்தரும் மரங்களை நடும் திட்டம் கொமர்ஷல் வங்கியின் அனுசரணையில் இடம்பெற்றது.

நிலைபெறுதகு எதிர்காலத்தை நோக்கி மரங்கள் நிறைந்த தேசம் எனும் மகுடத்தில் இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

தென்கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கொமர்ஷல் வங்கி உத்தியோத்தர்கள் கலந்து கொண்டனர். (அ)

## மட்டக்களப்பில் உள்ள அருவி பெண்கள் வலையமைப்பால் சுயதொழில் பயிற்சி



மட்டக்களப்பு, நவ. 14

மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பினால் போரதீவுபற்று வெல்லாவெளி பிரதேச செயலக பிரிவிற்கு உற்பட்ட சுய தொழில் முயற்சியாளாகளுக்கான ஈர்க்கு கட்டு மற்றும் தும்புத்தடி உற்பத்தி பயிற்சியும் அண்மையில் அவர்களின் இடம்பெற்றது.

பிரதேசத்தில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு சுயதொழில் முயற்சியினை ஊக்குவித்து அதன் மூலம் குடும்ப வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் இத்திட்டம் அருவி பெண்கள் வலையமைப்பினால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. (அ)

# உலக உணவுத் திட்டத்தின் கீழ் உலர் உணவு பொதி வழங்கல்

அம்பாறை, நவ. 14

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் ஆர். ராகுலநாயகி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம பிரதம அதிதியாக கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உலர் உணவு பொதிகளை வழங்கினார்.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் ஒரு குடும்பத்திற்கு இரண்டு மாதங்களுக்கு தேவையான 15000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் பி. பிரணவரூபன், உலக உணவு திட்டத்தின்



இணைப்பாளர் எஸ்.பாக்கியநாதன், அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஏ. அனீஸ், பிரதேச செயலகத்தின் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி திலகராணி கிருபைராஜா, நிர்வாக உத்தியோகத்தர் கே. யோகேஸ்வரன் சமூர்த்தி தலைமை பீட முகாமையாளர் எஸ் சிவம் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# பாலமுனையில் நீச்சல் பயிற்சி

அம்பாறை, நவ. 14

பாலமுனை இளைஞர்கள் சபையின் ஏற்பாட்டில், இலங்கை உயிர் காப்பு சங்கம் மற்றும் கல்குடா டைவர்ஸ் அமைப்பு இணைந்து நடத்தும் இலவச நீச்சல் பயிற்சி, உயிர் காப்பு சான்றிதழ் பயிற்சிநெறி பாலமுனை மின்ஹாஜ் தேசிய பாடசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாலமுனை இளைஞர்கள் சபையின் தலைவர் ஏ.எல்.எம். சீத் தலைமையில் அமைப்பின் ஆலோசகரும் சட்ட வைத்தியருமான எஸ்.எம்.றிபாஸ்தினின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந் நிகழ்வில் கல்குடா டைவர்ஸ் பயிற்றுவிப்பாளரும் விசேட சுழியோடியுமான கபீர் இப்றாஹிம், கல்குடா டைவர்ஸ் உதவி பயிற்று விப்பாளர்களான ஏ.எம்.எம்.றிஸ்வான், எம்.எஸ்.எம். சஜ்ஜாத் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சி வகுப்பினை தொடங்கி வைத்தனர்.

இதே வேளை இப்



பயிற்சியானது தொடராக அக்கரைப்பற்று மத்திய கல்லூரியின் நீச்சல் தாடாகத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் ஐ.எல்.எம்.பாயிஸ், கைமா விளையாட்டுக் கழக தலைவர் ஏ.ஆர்.சபீலூர் றசாத், மாவட்ட இளைஞர் சம்மேளனத் தலைவர் ஏ.ஆர். றிப்கான், அமைப்பாளர் எம்.ஏ .சிபான், உபதலைவர்களான யூ.எல்.ஹஸ்ஸாலி, ஐ.எம்.ஹம்தான் உட்பட மாணவர்களும் கலந்து கொண்டனர். (அ)

# தீபாவளி பூப்பந்தாட்ட போட்டி



காரைதீவு, நவ. 14

தீபத்திருநாளை முன்னிட்டும் காரைதீவு விளையாட்டுக்கழகத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டும் நடத்திய மாபெரும் பூப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் நேற்று நடைபெற்றது.

கழகத் தலைவர் தம்பிராசா தவக்குமார் தலைமையில், விபுலானந்தா மத்திய கல்லூரி பூப்பந்தாட்ட அரங்கில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில்,

பிரதம அதிதியாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட நிறைவேற்று பொறியியலாளரான பட்டய பொறியாளர் எந்திரி அருமைநாயகம் லிங்கேஸ்வரன் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக, கழகத்தின் போசகர்களான காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன், உத்தரவு பெற்ற நில அளவையாளர் வே.இராஜேந்திரன், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

வெற்றி பெற்ற வீரர்களுக்கு வெற்றி கிண்ணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (அ)

# காஸாவின் மிகப்பெரிய வைத்தியசாலை இஸ்ரேல் இராணுவத்தினரால் முற்றுகை!

ஜெருசலேம், நவ. 14

**காசா நகரின் மிகப்பெரிய வைத்தியசாலையான அல் சிபா வைத்தியசாலை இஸ்ரேல் இராணுவத்தினால் முற்றுகை இடப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.**

**அத்துடன், இஸ்ரேலிய இராணுவ வாகனங்கள் வைத்தியசாலை வளாகத்தை அண்மித்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.**

**அல் சிபா வைத்தியசாலையின் கொள்ளளவுக்கு மேலதிகமாக நோயாளர்கள் சிகிச்சை பெற்று வரும் நிலையில், அதில் சிறுவர்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**



இந்த நிலையில், நோயாளர்களுக்குத் தேவையான தண்ணீர் மற்றும் உணவு தீர்ந்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், வைத்தியசாலைக்கான மின் விநியோகம் முற்றாக தடைப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், வைத்தியசாலையில் புதிதாக பிறந்த குழந்தைகளின் உயிரை காப்பாற்றுவதற்கு தீவிர முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வைத்தியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த வைத்தியசாலையில் புதிதாக பிறந்த சுமார் 20 குழந்தைகள் உயிருக்கு ஆபத்தானை நிலையில் இருப்பதாகவும், இரண்டு குழந்தைகள் உயிரிழந்துள்ளதாகவும் வைத்தியர்களை மேற்கோள் காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனிடையே, வைத்தியசாலைக்குள் உள்ள நோயாளர்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வைத்தியசாலையை விட்டு வெளியேறுவதற்கான சாத்தியமில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும், அல் சிபா வைத்தியசாலையில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் பதுங்கியிருப்பதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இதன்படி, ஹமாஸ் ஆயுதக் குழு நோயாளர்களை மனிதக் கேடயமாக பயன்படுத்திவருவதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, ஹமாஸ் ஆயுதக்குழுவுக்கு சொந்தமான பாரிய சுரங்கப்பாதையின் நுழைவாயில் அல் சிபா வைத்தியசாலைக்குள் இருப்பதாக இஸ்ரேலிய இராணுவம் குற்றம் சாட்டியது. (அ)




# யூத விரோத நடவடிக்கைகளை கண்டித்து பிரான்ஸில் பேரணி

பாரிஸ், நவ. 14

யூத-விரோத நடவடிக்கைகளை கண்டித்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸ் முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டங்களில் சுமார் ஒரு இலட்சத்து 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றியதாக பிரான்ஸ் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

குறித்த எதிர்ப்பு போராட்டங்களுக்கு தடை விதிக்கப்பட்ட நிலையில் 2022 முழுவதைவிட கிட்டத்தட்ட மூன்று மடங்கு பெரியளவிலான போராட்டமாக இது பதிவாகியுள்ளது.

பிரதமர் எலிசபெத் போர்ன், முன்னாள் ஜனாதிபதிகள் நிக்கோலஸ் சர்கோசி மற்றும் பல இடதுசாரி கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனின் கட்சியினர் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது தலைநகரில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# 60 இற்கும் மேற்பட்ட பள்ளிவாசல் அழிப்பு



ஜெருசலேம், நவ. 14

முற்றுகையிடப்பட்ட காசா நகரின் சப்ரா பகுதியில் உள்ள அல்-சலாம் பள்ளிவாசலில் இஸ்ரேலிய விமானம் குண்டுவீசித் தாக்குதல் நடத்தியுள்ளது.

இதனோடு கடந்த மாதம் 7 ஆம் திகதி முதல் இஸ்ரேலிய படைகளால் அழிக்கப்பட்ட மொத்த பள்ளிவாசல்களின் எண்ணிக்கை 60 இற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது என்று அறிக்கை கூறுகிறது.

வழிபாட்டுத் தலங்கள் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கீழ் ஒரு கலாசாரச் சொத்தாகப் பாதுகாப்பதற்குத் தகுதி பெறுகின்றன. (அ)

# இம்ரான் கானின் மனைவி புஷ்ரா பீபியும் கைதாவார்?

இஸ்லாமாபாத், நவ. 14

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் மனைவி புஷ்ரா பீபி, கைது செய்யப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

பெப்ரவரி 2024 இல் திட்டமிடப்பட்ட தேசிய தேர்தல்களை நோக்கிய தேர்தல் பிரசார பரபரப்பு அதிகரித்து வரும் நிலையில், இம்ரானின் ஊழல் வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட சில மாதங்களுக்குப் பிறகு இந்த வளர்ச்சி வந்துள்ளது.

பாகிஸ்தான் ஊடகங்களில் வெளியான செய்திகளின்படி, அல்-காதர் அறக்கட்டளை ஊழல் வழக்கில் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் மனைவி புஷ்ரா பீபி மற்றும் அவரது நெருங்கிய நண்பர் பர்ஹத் ஷெஹ்சாதி ஆகியோரை விசாரிக்க பாகிஸ்தான் அரசின் ஊழல் தடுப்புப் பிரிவு, தேசிய பொறுப்புக்கூறல் பணியகம் சம்மன் அனுப்பியுள்ளது.



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி 50 பில்லியன் ரூபாய்களை சட்டப்பூர்வமாக்குவதற்காக பல பில்லியன் ரூபாய்கள் மற்றும் நூற்றுக்கணக்கான கானல் நிலங்களை பெற்றதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இம்ரான் கான் பிரதமராக இருந்த காலத்தில் இந்த தொகை ஐக்கிய இராச்சியத்தால் அடையாளம் காணப்பட்டு பாகிஸ்தானுக்கு திருப்பி அனுப்பப்பட்டது.

அல்-காதர் அறக்கட்டளையில் இருந்து தனது குடும்ப உறுப்பினர்களுக்கு பணத்தை மாற்றியதாக புஷ்ரா பீபி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் மற்றும் மேற்கு ஆசியாவில் உள்ள 100 இற்கும் மேற்பட்ட வங்கிக் கணக்குகளில் புஷ்ரா பீபி 14 பில்லியன் ரூபாய்களை போட்டதாக பாகிஸ்தான் ஊடகங்களில் செய்திகள் கூறுகின்றன.

பாகிஸ்தானின் தி நியூஸ் இன்டர்நஷனல் பப்ளிகேஷன் மேற்கோள் காட்டிய ஆதாரங்களின்படி, தேசிய பொறுப்புக்கூறல் பணியகத்திற்கு சில புதிய தகவல்கள் கிடைத்துள்ளன. அவை உறுதி செய்யப்பட்டால், 49 வயதான அவர் குற்றவாளியாக மாற்றப்பட்டு கைது செய்யப்படலாம். (அ)

# காஸாவை கைப்பற்ற தயாராகும் இஸ்ரேல்!

டெல் அவிவ், நவ. 14

காஸா பகுதியில் உள்ள மிகப்பெரிய வைத்தியசாலையில் இருந்து குழந்தைகளை வெளியேற்ற தயாராக இருப்பதாக இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

அந்தப் பகுதியில் கடும் மோதல்கள் ஏற்பட்டுள்ளதோடு, புதிதாகப் பிறந்த இரண்டு குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனிடையே, எரிபொருள் தீர்ந்துள்ளதால் மேலும் பல குழந்தைகள் ஆபத்தில் உள்ளதாகவும் ஹமாஸ் சுகாதார அதிகாரிகள் கூறியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் காஸாவை விட்டு வெளியேறுவதற்காக ரபா எல்லையை மீண்டும் திறக்கத் தயார் என எகிப்து அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், போர் முடிவுக்கு வந்த பிறகு, காஸா பகுதி ஹமாஸ் போராளிகளிடமிருந்து விடுவிக்கப்படும் என்றும், காஸா பகுதியின் பாதுகாப்பை அதன் இராணுவம் கட்டுப்படுத்தும் என்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

கடந்த ஏழாம் திகதி போர் தொடங்கியது முதல் ஹமாஸால் கைப்பற்றப்பட்ட பணயக் கைதிகளை விடுவிக்கும் வரையில், போர் நிறுத்தத்திற்கான சர்வதேச அழைப்புகளையும் பெஞ்சமின் நெதன்யாகு நிராகரித்தார்.

காஸாவில் ஹமாஸின் 16 ஆண்டுகால ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வரவும், அதன் இராணுவ திறன்களை கட்டுப்படுத்தவும் இஸ்ரேல் சபதம் செய்துள்ளது.

போர் ஆறாவது வாரமாக நீடித்துள்ள நிலையில், இஸ்ரேல் அதன் நெருங்கிய நட்பு நாடான அமெரிக்காவிடமிருந்தும் அழுத்தத்தை எதிர்நோக்கியுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில், காஸா பகுதியைக் கைப்பற்றத் தயாராக இருப்பதாக பலஸ்தீன அதிகாரசபை தெரிவித்துள்ளது.

(அ)

# சுதந்திர கட்சியின் ஒத்துழைப்பு இந்த அரசுக்கு நிச்சயம் தேவை!

## கூறுகிறார் அமைச்சர் மகிந்த அமரவீர

கொழும்பு, நவ. 14

**சுதந்திர கட்சியின் ஒத்துழைப்பு இருந்தால் மாத்திரமே அரசாங்கத்தை நடத்திச் செல்ல முடியும் என விவசாயத் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்-**

அரசாங்கம் ஒன்றை நடத்தி செல்ல மொட்டுக் கட்சியின் ஒத்துழைப்பு அவசியம். அதே போன்று சுதந்திர கட்சி இல்லா விட்டாலும் அரசாங்கத்தை நடத்திச் செல்ல முடியாது.

நாங்கள் இல்லாவிட்டால் 113 இல்லை. யாரையும் ஒன்று சேரத்துக்கொண்டு செல்லும் வேலைத்திட்டத்திற்கு ஜனாதி பதி செல்வார்.

ஆனால் எங்களை ஒருபுறம் வைத்துவிட்டு செல்ல முயற்சித் தால் அரசாங்கம் ஒன்று இல்லை.

அதிகமானோர் தற்போது மொட்டு கட்சியில் இருந்தும் விலகி இருக்கின்றார்கள்.

மொட்டுக் கட்சியும் சிறி லங்கா சுதந்திர கட்சியும் தற் போது ஜனாதிபதியுடன் ஒன்று சேர்ந்துள்ள தரப்பினரும் ஒன் றிணைந்தால் மட்டுமே முறை



யாக ஆட்சியை நடத்த முடியும்.

ஆட்சி செய்வதென்றால் ஆட்சி நடத்த வேண்டும். ஒத்து ழைப்பு வழங்குவதென்றால் ஒத்துழைப்பு வழங்க வேண் டும். இல்லாவிட்டால் ஒன்றும் செய்யாமல் விலகி இருக்க வேண்டும்-என்றார். (அ)

# சர்வதேச கணக்கியல் நாள் நிகழ்வு



யாழ்ப்பாணம், நவ. 14

சர்வதேச கணக்கியல் நாள் நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்க லைக்கழக முகாமைத்துவ கற் கைகள் மற்றும் வணிக பீடத் தில் நடைபெற்றது.

இலங்கை பட்டயக் கணக்கா ளர்கள் நிறுவனத்தின் அனுசர ணையுடன் முகாமைத்துவ கற் கைகள் மற்றும் வணிக பீடத் தின் கணக்கியல் துறையினால் நடாத்தப்பட்ட இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சி. சிறிசற் குணராஜா, முகாமைத்துவ கற் கைகள் மற்றும் வணிக பீடத் தின் பீடாதிபதி பேராசிரியர் என். கெங்காதரன், முன்னாள் பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறு வனத்தின் பிரதிநிதிகள் பணியா ளர்கள், மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர் கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (அ)



# குருநகர் யாகப்பர் ஆலய படுகொலை நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ்ப்பாணம் குருநகர் புனித யாகப்பர் ஆலயம் மீதான விமான தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 30ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

ஆலயத்தில் காலை திருப்ப லியின் நிறைவில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. அதன் போது உயிரிழத்தவர்க ளின் உறவினர்கள் உள்ளிட் டோர் சுடரேற்றி, மலர் தூபி அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் திகதி காலை திருப்பலி வழிப்பாட் டுக்கு மக்கள் கூடியிருந்த வேளை, இலங்கை விமான படையின் "சுப்பர் சொனிக்" விமானங்கள் ஆலயத்தின் மீது குண்டு வீசியதில் ஆலயத்தில் வழிப்பாட்டில் ஈடுபட்டிருந்த 8 வயதுச் சிறுமி உள்ளிட்ட 13 பேர் படுகொலை செய்யப்பட் டிருந்ததுடன், 25 இற்கும் அதிக மானோர் படுகாயமடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இராஜதந்திர அனுமதி வழங்குவது தொடர்பாக வெளிநாட்டு தூதரகங்களுக்கு விசேட அறிவிப்பு!

கொழும்பு, நவ. 14

வெளிநாட்டு போர்க்கப்பல் கள், விமானங்கள் மற்றும் ஆராய்ச்சிக் கப்பல்களுக்கு இரா ஜதந்திர அனுமதி வழங்குவது தொடர்பாக மேற்கொள்ளப்ப டும் புதுப்பிப்புகள் குறித்து வெளிநாட்டு தூதரகங்களுக்கு அறிவிப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

சீன ஆய்வுக் கப்பல் நாட் டுக்கு வர விண்ணப்பித்தபோது இந்தியா, சீனா மற்றும் இலங்கை இடையே அரசியல் நெருக்கடி ஏற்பட்டது.

நாட்டின் மேற்கு கடல் பகு தியில் ஆய்வு பணிக்காக வருவ தாக சீனக் கப்பல் அறிவித்தா லும், இந்தியா தனது நாட்டை உளவு பார்ப்பதற்காக குறித்த கப்பல் வருவதாக கூறியது.

இந்த நிலைமையைக் கருத் தில் கொண்டு, குறித்த கப்பல் கள், விமானங்கள் மற்றும் ஆராய்ச்சிக் கப்பல்களுக்கான நிலையான இயக்க நடைமு றையை மீளாய்வு செய்ய அர சாங்கம் முடிவு செய்தது.

இந்த நிலையில் தேசிய பாது காப்புச் சபையில் இது குறித்து விவாதிக்கப்பட்டதாக தகவல் கள் வெளியாகியுள்ளன.

குறித்த கப்பல்கள், விமா னங்கள் மற்றும் ஆராய்ச்சிக் கப்பல்களுக்கு இராஜதந்திர அனுமதி வழங்குவதற்கான நிலையான இயக்க நடைமு றையை மேம்படுத்த நடவ டிக்கை எடுக்கப்பட்டது.

அதன்படி, இது தொடர் பான அமைச்சரவை அங்கீகா ரமும் அண்மையில் கிடைத்த தாக வெளிவிவகார அமைச்ச ரும் ஜனாதிபதி சட்டத்தரணியு மான அலி சப்ரி குறிப்பிட்டார்.

இது தொடர்பில் இலங்கை யுடன் இணைந்து செயற்படும் அனைத்து நாடுகளுக்கும் பல் வேறு தரப்பினருக்கும் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட் டார். (அ)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் கொடிகாமத்தில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், நவ. 14

கொடிகாமத்தில் தீபாவளி தினமான நேற்று முன் தினம் இடம்பெற்ற மோட்டார் சைக் கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந் துள்ளார்.

கெற்பேலி - கச்சாய் வீதியி லேயே குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

சம்ப தினத்தன்று வேகக்கட் டுப்பாடை இழந்த குறித்த நப ரது மோட்டார் சைக்கிள் வீதி யோரத்தில் இருந்த மதகுடன் மோதியிலேயே குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

இந்நிலையில் விபத்தில் உயிரிழந்தவர் மிருசுவில் பகுதி யைச் சேர்ந்த 56 வயதான நபர் எனவும், இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# சீனியின் விலையை குறைக்க நடவடிக்கை!

கொழும்பு, நவ. 14

சந்தையில் சீனிக்கு தட்டுப் பாடு ஏற்படாது எனவும் அடுத்த சில நாட்களில் சீனியின் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

சீனிக்கான வரி அதிகரிப்ப தற்கு முன்னதாக, 25 சதத்தை வரியாக செலுத்தி இறக்குமதி செய்யப்பட்டுள்ள 45 ஆயிரம் மெற்றிக் தொன் சீனி கையிருப் புகள் தற்போது களஞ்சியசாலை களில் உள்ளன.

சீனி இறக்குமதியாளர்களு டன் அண்மையில் முன்னெடுக் கப்பட்ட கலந்துரையாடலின் போது, குறித்த சீனி கையிருப்பை 275 ரூபாவுக்கு மேற்படாமல்



விற்பனை செய்யும் வகையில் சில்லறை வர்த்தகர்களுக்கு வழங் குமாறு அறிவுறுத்தியதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அதற்கமைய, குறைந்த விலை யில் சீனியை விநியோகிக்க நட வடிக்கை எடுக்கப்படுமென அவர் தெரிவித்தார்.

அத்துடன், சீனி கையிருப்பு கள் களஞ்சியப்படுத்தப்பட் டுள்ள இடங்களைச் சோதனை யிட நுகர்வோர் விவகார அதி கார சபையின் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள் ளதாகவும் அமைச்சர் குறிப்பிட் டார்.

எனவே, 275 ரூபாவுக்கு மேற் படாத வகையில் சீனியை விற் பனை செய்யுமாறு சில்லறை விற்பனையாளர்களை கோருவ தாகவும், அதிக விலைக்கு சீனியை விநியோகிக்கும் களஞ் சியசாலைகளுக்கு எதிராக சட் டநடவடிக்கை எடுக்கப்படுமெ னவும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார். (அ)

# பலஸ்தீனர்களிடம் கைப்பற்றப்பட்ட நிலங்களில் பணிபுரிய இலங்கையர்!

## மோதலுக்கு வழிவகுக்குமென எச்சரிக்கை

கொழும்பு, நவ. 14

பலஸ்தீனர்களிடம் இருந்து இஸ்ரேல் கைப்பற்றியுள்ள காணி களில் இலங்கையர்கள் விவசாய வேலைகளுக்கு கூலிகளாக அமர்த்தப்படுவதாக தகவல் கிடைத்துள்ளதாக முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அது அந்த இலங்கையர்க ளின் பாதுகாப்பு தொடர்பான கேள்விகளை எழுப்பியுள்ளதாக வும் அவர் சுட்டிக்காட்டினார்.

பலஸ்தீனியர்களிடம் இருந்து திருடப்பட்ட சொத்துக்களில் உள்ள பண்ணைகளை பராம ரிக்க நமது தொழிலாளர்கள் பணியமர்த்தப்படுவதாக தெரி விக்கப்படுகிறது.

இது இலங்கையர்களின் பாதுகாப்பு தொடர்பான கேள்வி. மறுபுறம் இந்தப் பண்ணைக ளில் வாழ்ந்த பலஸ்தீனியர்கள் இன்று வாழ வழியில்லை. இதன் மூலம் மேலும் மோதல்களை உருவாக்க முயற்சிக்கப்படுவதா கவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் இஸ்ரேலில் பணியாற்ற பத்தாயிரம் இலங் கையர்கள் அனுப்பப்படவுள்ள தாக தகவல் வெளியானமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பல்கலை....

உள்ளூர், வெளிநாட்டு மாணவர்கள் உயர் கல்வியைத் தொடர இது சிறந்த வழியாகவும் அமையும்-என்றார். (அ)

## காணாமல்....

செய்துள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பித்து உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். (அ)

## துண்டு....

அத்துடன் 2024 ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் மொத்த செலவீனம் 6,978 பில்லியன் ரூபாவாகும்.

இதன்படி வரவு செலவு திட்ட பற்றாக்குறை ( துண்டுவிழும் தொகை ) 2,851 பில்லியன் ரூபாவாகும். (அ)

## இம்முறை....

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரி விக்கையில்-

அதைப் பார்க்கும்போது பல விடயங்களை கடந்த வரவு-செலவுத் திட்டத்திலும் அவர் முன்வைத்துள்ளார்.

அவை நிறைவேற்றப்படவில்லை எனத் தெரிகிறது. அத னால் மீண்டும் முன்வைத் துள்ளார்.

ஒரே விடயம் இரண்டு முறை கூறப்படு கிறதெனின், அந்த விடயம் அடிமட்ட அளவில் நடைமுறையில் நிறைவேற்றப்பட் டதா? இல்லையா? என்ற கேள்வி எங்களுக்கு உள்ளது.

எனவே இவ்வருட வரவு-செலவுத் திட்டமும் அதுபோன்ற பேச்சுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டமாக இருக்குமா என்பது தொடர்பில் காத்திருக்கிறோம்.

எதிர்வரும் காலங்களில் இதை ஆய்வு செய்து, பாராளுமன்ற விவாதத்தில் எங்களது யோசனைகளை முன்வைப்போம். ஜனாதிபதி ஏற்றுக்கொள்வாரா என்பதை பார்ப்போம்.

மொட்டுக் கட்சியின் ஆட்சி காலத்தில் நிதியமைச்சராக இருந்து அவர் வந்துள்ளார். அப்படியானால், வரவு-செலவுத் திட்டங்களில் எங்கள் கொள்கைகள் இருக்க வேண்டும். வேடிக்கை கதைகள் பயனற்றவை -என்றார். (அ)

## அரச...

போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரி விக்கையில்-

மிகவும் நெருக் கடியான நாட்டையே நான் பொறுப்பேற்றுக் கொண்டேன். நாடு பொருளாதார ரீதியாக அனைத்து மட்டத்திலும் தோல்வி கண்டிருந்தது.

தற்போது பொருளாதாரத்தை மறுசீரமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

அரச ஊழியர்களின் சம்பவத்தை நினைத்தவுடன் அதிகரிக்க முடியாது. சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என்றால் வரியையும் அதிகரிக்க வேண்டும். அரச வரியை அதிகரிப்பதிலும் எதிர்ப்புக்கள் உள்ளன. அரச கட்டமைப்பபை வலுப்படுத்த வரி வருமானத்தை அதிகரிப்பது அவசியமாகும்.

அரசியல் நோக்கங்களுக்காக மாயைகளைப் பரப்புவதை நிறுத்துமாறும், அரசியலை விட நாட்டைப் பற்றி சிந்தித்து நாட்டை உயர்த்துவதற்கு அனைவரும் தம்மை உண்மையாக அர்ப்பணிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

இதுவரையான பயணத்தின் வெற்றிக்கு அரசால் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டமே காரணமாகும். அதன் ஊடாக 2022 ஆம் ஆண்டைப் போன்று பொருளாதார நரகத்தில் வீழ்ந்துவிடாமல் முன்னோக்கிச் செல்வதற்கு அடித்தளமிடப்பட்டுள்ளது- என்றார். (அ)

## அரச ஊழியர்களுக்கு....

2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று முன்வைத்து உரையாற்றினார். இதன்போதே அவர் மேற்படி தகவல்களை வெளியிட்டார்.

இந்த வரவு - செலவு திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான 10ஆயிரம் ரூபா வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு அதிகரிப்பு மாத்திரமே கவர்ச்சிகரமான அறிவிப்பாக இருந்தது.

அதற்கு அப்பால் மக்கள் நலன் கருதி பல்வேறு முன்மொழிவுகள் ஜனாதிபதியால் முன்மொழியப்பட்டன.

அவை வருமாறு: -

- யாழ்ப்பாணத்தில் நிலவும் தண்ணீர் பிரச்னைக்குத் தீர்வு காணப்படும் அதற்கான பணிகளுக்காக 250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முரண்பாடுகள் முடிவுக்கு வந்து இது வரை மீள்குடியேற்றம் செய்யப்படாத இடங்கள் உள்ளன. அவற்றில் மக்களை மீள்குடியேற்ற இதற்காக 2 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- வடக்கு கடற்றொழிலாளர்களின் கடற்றொழிலை அபிவிருத்தி செய்யவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- கடற்றொழிலாளர்களின் வருமானத்தை அதிகரிக்க தனியார் துறையுடன் இணைந்ததாகத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த அரசு எதிர்பார்த்துள்ளது.
- ஊனமுற்ற நபர்கள், நோயாளிகள் மற்றும் மூத்த குடிமக்களுக்கான நன்மைத் திட்டங்களுக்கு 205 பில்லியன் ரூபா ஒதுக்கீடு.
- சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு, ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆதரவுடன் 30 பில்லியன் ரூபா கடன் வசதி.
- நாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களையும் உள்ளடக்கும் வகையில் ‘சுரக்ஷா’ மாணவர் காப்பீட்டுத் திட்டம் மீண்டும் அறிமுகப்படுத்தப்படும்.
- 2024 ஆம் ஆண்டில் கொழும்பில் சுமார் 50 ஆயிரம் குடும்பங்களுக்கு வீட்டு உரிமை வழங்கப்படும்.
- குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படும் நகர்ப்புற வீடுகளுக்கு வாடகை பெறுவது நிறுத்தப்படும். அந்த வீடுகளின் உரிமை குடியிருப்போருக்கு வழங்கப்படும்.
- முதியோர் கொடுப்பனவு 1000 ரூபாவில் இருந்து 3,000 ரூபாவாக அதிகரிக்கப்படும்.
- கர்ப்பிணிகளுக்கான மாதாந்தக் கொடுப் பனவு 10 ஆயிரம் வரை அதிகரிப்பு.
- பெருந்தோட்ட மக்களுக்கு முழுமையான காணி உரிமை. அதற்காக 4 பில்லியன் ரூபா ஒதுக்கீடு.
- செயற்கை நுண்ணறிவுக்கான தேசிய மையத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகள். இதற்காக அடுத்த வருடத் திற்கு 03 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்படவுள்ளது.
- அரச ஒய்வு விடுதிகளை நவீனமயமாக்கி, சுற்றுலாவை மேம்படுத்த அவற்றைப் பயன்படுத்துவதற்கான திட்டம். அதற்காக 600 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும்.
- வெளிநாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான அடிப்படை நடவடிக்கையாக, இறக்குமதி செஸ், துறைமுகம் மற்றும் விமான நிலைய வரி உள்ளிட்ட சுங்க வரி அல்லாத இறக்குமதி வரிகளை நீக்க நடவடிக்கை
- உள்கட்டமைப்பு கூட்டுத்தாபனத்தை அமைப்பதற்கு 250 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும்.
- சுற்றுலாத்துறையை மேம்படுத்த மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவங்களுடன் இணைந்து 2024 ஆம் ஆண்டு முதல் நீண்டகால வேலைத்திட்டம், 1 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு
- ஹம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், திருகோணமலை, பிங்கிரிய மற்றும் கண்டி ஆகிய இடங்களை மையமாகக் கொண்டு புதிய முதலீட்டு வலயங்கள் நிறுவப்படும்.
- புதிய நிலச் சட்டம் அறிமுகப்படுத்தப்படும், புதிய சட்டங்கள் மற்றும் காலாவதியான சட்டங்கள் திருத்தப்படும் அதன்படி, 60 புதிய சட்டங்கள் மற்றும் திருத்தச் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
- கடன் பெறுவதற்கான வரம்பு 3900 பில்லியன் ரூபாயிலிருந்து 7350 பில்லியன் ரூபாயாக அதிகரிக்கப்படும் .
- 2032 ஆம் ஆண்டளவில் இலங்கையின் பொதுக் கடன் 95 வீதமாகக் குறைக்கப்படும்
- அரசுக்கு சொந்தமான இரண்டு வங்கிகளின் இருபது சதவீத பங்குகள் முதலீட்டாளர்கள் அல்லது பொதுமக்களுக்கு வழங்கப்படும்.
- வெளிநாட்டு கடனை மறுசீரமைத்த பின்னர், மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் கடவத்தை முதல் மீரிகம வரையிலான பகுதிக்கான பணிகள் சீனாவுடன் இணைந்து ஆரம்பிக்கப்படும்.
- நாட்டின் பொதுக் கடன் 2022 இல் 128% இலிருந்து 2023 இல் 95% ஆக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- மாகாண சபையின் வருமானத்தை மாகாணத்தின் அபிவிருத்திக்காக பயன்படுத்துவதற்கான முன்மொழிவு
- நாட்டின் கலாசாரத்தை வளர்ப்பதற்கான விசேட வேலைத்திட்டம்.
- பாடசாலை மற்றும் மாகாண மட்டத்தில் கிரிக்கெட் விளையாட்டை கட்டியெழுப்ப 1.5 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு, பற்றாக்குறை உள்ள மாகாணங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு முன்னுரிமை.
- பெண்கள் அதிகாரம் பெற புதிய சட்டங்கள்.
- இளைஞர் சமூகத்தை வலுப்படுத்த 300 மில்லியன் ரூபா.
- வடக்கு கிழக்கில் மீள்குடியேற்றத்திற்கு 2,000 மில்லியன்.
- காணாமல் போனவர்களுக்கு இழப்பீடு. வடக்கு கிழக்கில் காணாமல் போனவர்களுக்கான இழப்பீட்டுத் தொகையை விரைவாக வழங்குவதற்கு மேலும் 1000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு .
- யாழ்ப்பாணம் பூநகரி நகர் அபிவிருத்தி - 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு
- யாழில் குடிதண்ணீர் பிரச்னைக்கு தீர்வு, யாழ்ப்பாணத்தில் நிலவும் தண்ணீர் பிரச்னைக்கு தீர்வை வழங்குவதற்கான அடிப்படை பணிகளுக்காக 250 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் குடிநீர் பிரச்னைக்கு 2024 ஆண்டின் முதல் காலாண்டுக்குள் நிரந்தர தீர்வு.
- விவசாயத்தை நவீனமயமாக்கவும் நெல் உற்பத்தியை அதிகரிக்கவும் தீர்மானம்
- சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் துறையை மேம்படுத்த அரச வங்கிகள் ஊடாக இலகு வட்டி வீதத்திலான கடனுதவி, இதற்காக 30 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
- திருகோணமலை துறைமுகம் அபிவிருத்தி செய்ய்யப்படும்
- சுற்றுலாப் பயணிகளுக்கு உள்ளூர் மற்றும் ஆயுர்வேத சிகிச்சைகளை வழங்குவதற்காக ஹோட்டல்களில் உள்ளூர் ஆயுர்வேத சிகிச்சை நிலையங்களை நிறுவ 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு
- ஏனைய நாடுகளின் நிலைக்கு ஏற்ப மருத்துவ ஆராய்ச்சி, 75 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு
- 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக மாகாணங்களுக்கு பல்கலைக்கழகங்களை ஸ்தாபிக்க முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒழுங்குமுறை எதிர்வரும் ஆண்டு முதல் செயற்படுத்தப்படும்
- தொழிற்கல்வி நிறுவனங்களை மாகாண சபைகளுக்கு மாற்ற தீர்மானம்
- தகவல் தொழில்நுட்ப பட்டதாரி பயிற்சி திட்டம்.
- ஆங்கில மொழி கல்வியறிவுக்கான திட்டம்.
- பேராதனை பல்கலைக்கழகத்தில் இருந்து அரச பல்கலைக்கழகங்கள் புதிய காலத்திற்கு ஏற்றவாறு மேம்படுத்தல்
- அரசு சாரா பல்கலைக்கழகங்களை ஒழுங்குபடுத்த வலுவான சட்டங்கள் கொண்டு வரப்படும்
- தனியார் வங்கிகள் மூலம் மாணவர்களுக்கு சலுகை கடன் திட்டம். வேலை கிடைத்தவுடன் திருப்பிச் செலுத்தும் வாய்ப்பு .
- நாட்டில் உள்ள பழைய கல்வி முறை நீக்கப்பட்டு நவீன உலகுக்கு பொருத்தமான கல்வி முறைமை ஏற்படுத்தப்படும்.
- உயர்தர பரீட்சைக்கு தோற்றும் சகல மாணவர்களுக்கும் பல்கலைக்கழக கல்விக்கான வாய்ப்பு
- கிராமங்களில் வீதிகள் அபிவிருத்திக்கு 10 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.
- நவீன உலகுக்கு பொருந்தும் வகையில் எதிர்காலத்தில் மேலதிகமாக 4 பல்கலைக்கழகங்கள் ஸ்தாபிக்கப்படும்
- பல்கலைக்கழகங்களைத் தொடங்கும் அதிகாரம் தனியார் துறைக்கு
- கர்ப்பிணித் தாய்மார்களுக்கான மாதக் கொடுப்பனவுகளுக்காக 10 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு
- அஸ்வெசும நலன்புரி திட்டத்துக்காக அடுத்த ஆண்டுக்கு 283 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
- ஓய்வூதியம் பெறுவோருக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் 2,500 ரூபாய் (விசேட தேவையுடையவர்கள், நீரிழிவு, புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும்) அதிகரிக்க முன்மொழிவு .
- 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இருந்து அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபாய் கொடுப்பனவு.
- ஒட்டுமொத்த மக்களும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளாகியுள்ள நிலையில் அரச ஊழியர்களுக்கு மட்டும் ஒரே கட்டத்தில் சம்பளத்தை அதிகரிக்க முடியாது.
- அரச ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்க வேண்டுமாயின் அரச வருமானத்தை அதிகரிக்க வேண்டும் /பணத்தை அச்சிடவேண்டும், கடன் பெறவேண்டும்.
- அரச ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்க வேண்டுமாயின் அரச வருமானத்தை அதிகரிக்க வேண்டும் / பணத்தை அச்சிட வேண்டும், கடன் பெறவேண்டும்.
- நாட்டின் நலனுக்காக அனைவரும் முழு மனதுடன் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.
- பணவீக்க வீதத்தை ஒற்றை இலக்கத்திற்கு வெற்றிகரமாகக் குறைத்தமையே நாட்டின் மீட்சிக்குக் காரணம் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். (அ)

## சென்னை....

அறிவிக்கப்பட்டுள்ளது.

விமானத்தில் பயணித்த பயணிகள் அனை வரும் சென்னையில் உள்ள ஹோட்டல்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

## பிரிட்டன்....

சுனக் இந்த அதிரடி நடவ டிக்கையை எடுத்தார்.

டேவிட் கமரூன் கடந்த 2010-2016 முதல் இங்கிலாந் துப் பிரதமராக பதவி வகித்தார்.

2016ஆம் ஆண்டு பிரெக்சிட் பொது வாக்கெடுப்பு தோல்வி அடைந்த தால், பிரதமர் பதவியில் இருந்து டேவிட் கெமரூன் பதவி விலகினார்.

அதன்பிறகு கிட்டதட்ட 6 ஆண்டுகளுக்கு பிறகு முக்கிய பொறுப்புக்கு டேவிட் கமரூன் வந்துள்ளார்.

அதேபோல், பதவி நீக்கம் செய்யப்பட்ட சுவெல்லா பிரேவர்மேனுக்கு பதிலாக உள்துறை அமைச்சராக்கப்பட்டுள்ளார் கிளவர்லி. வெளியுறவுத்துறை அமைச்சராக பதவி வகித்து வந்த ஜேம்ஸ் கிளவர்லி, உள்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

பலாங்கொடை மண்சரிவு:

## காணாமல்போன நால்வரை தேடும் நடவடிக்கை தீவிரம்!

கொழும்பு, நவ. 14

பலாங்கொடை பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி காணாமல் போயுள்ள நால்வரையும் தேடும் பணி களில் இராணுவத்தினரும் ஈடுபட்டனர் என தெரிவிக் கப்பட்டது.

இராணுவத்தினர் நேற்று காலை முதல் தேடுதல் பணி களில் ஈடுபட்டதாக குறிப்பிடப்பட்டது.

பலாங்கொடை - கவரன்ஹேன - வெயின்தென்ன பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி நால்வர் காணாமல்போயுள்ளதாக அனர்த்த முகா மைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை, இரண்டு பிள்ளைகளே இவ்வாறு காணாமல்போயுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது. (அ)

## மயிலத்தமடுவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களை வெளியேற்றுக!

### வழக்கு விசாரணையில் நீதிமன்றம் உத்தரவு

மட்டக்களப்பு, நவ. 14

**மயிலத்தமடு மாதவனைப் பகுதியில் சட்டவிரோதமாக குடி யேறியவர்களை வெளியேற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள் ளது.**

**நேற்று திங்கட்கிழமை ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் இடம் பெற்ற வழக்கின்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.**

மட்டக்களப்பு - மயிலத்தமடு மாதவனை பகுதியில் மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான அரச காணியில் அத்துமீறி குடி யேறியதாக தெரிவித்து 13 பேருக்கு எதிராக ஏறாவூர் நீதிமன்றில் மகாவலி அதிகார சபையினால் கடந்த மாதம் 22 ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்று தீர்ப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனை பகுதியில் அத்துமீறி குடியேறியதாக தெரிவிக்கப்பட்ட 13 பேரும் நேற்று நீதிமன்றில் ஆஜராகினர். மகாவலி அதிகார சபை சார்பாக அரச சட்டத்தரணி டில்காணி டி சில்வா ஆஜராகியிருந் தார்.

இந்நிலையில் அதிகாரம் பெற்ற அதிகாரிகளினால் வழங்கப்பட்ட எந்த ஆவணமும் அத்துமீறி குடியேறியவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டவர்களினால் நீதி மன்றுக்கு சமர்ப்பிக்கப்படாத தால் மட்டக்களப்பு மயிலத்தமடு மாத வனை பகுதியில் அத்துமீறி குடி யேறிய குறித்த 13 பேரையும் வெளி யேற்றுமாறு நீதிவான் கட்டளை பிறப்பித்தார்.

மயிலத்தமடு, மாதவனை பகுதியில் அத்துமீறிய பயிர்ச்செய் கையாளர்களை அகற்றுமாறு கோரி அப்பகுதி கால்நடை பண்ணையா ளர்கள் 60ஆவது நாளாக நேற்றும் போராட்டம் முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சம்பள அதிகரிப்பு மட்டும் போதாது! பொருள் விலை குறையவேண்டும்!!

### ரோஹித அபேகுணவர்தன கோரிக்கை



கொழும்பு, நவ. 14

அரச உத்தியோகத் தர்கள் மாத்திரமின்றி ஏனைய மக்களும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். எனவே பொருட் களின் விலைகளும் குறைக்கப்பட வேண் டும். இந்த வரவு - செலவு திட்டம் மக்களுக்கு சிறப்பானதாக அமைய வேண்டும் என்று இறைவனை பிரார்த்திப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன அலுவலகத்தில் நேற்று திங்கட் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

அரச உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமின்றி நாட்டு மக்கள் அனைவரும் பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின் றனர்.

எனவே அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை அதிகரிப்பதை விட பொருட்களின் விலைகளைக் குறைப்பது சிறந்ததாகும்.

அதனை விடுத்து சம்பளத்தை அதிகரிப்பதாயின் அரச உத்தியோகத்தர்களது சம்பளம் மாத்திரமின்றி, தனியார் துறையினருக்கும் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்.

சரியாக நோயை இனங்கண்டு அதற்கு சிகிச்சையளிப் பதற்கான யோசனையையே நாம் அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளோம்.

எமது பரிந்துரைகளை முன்வைத்திருக்கின்றோமே தவிர, பொதுஜன பெரமுன சார்பில் வரவு - செலவு திட் டம் தொடர்பில் விசேட கலந்துரையாடல்கள் எவற் றையும் முன்னெடுக்கவில்லை. எவ்வாறிருப்பினும் இந்த வரவு - செலவுத் திட்டம் மக்களுக்கு சிறந்ததாக அமைய வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும் - என்றார். (அ)

**யாழ்.நகரில் காணி உடன் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3½ பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற் பனைக்குண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலை யத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந் துள்ளது. 55 மில்லியனுக்கு (5 கோடியே 50 லட்சம்) மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு : +447963743585 (Whatapp), 0212227141(Sri Lanka)

மின்னஞ்சல் : Jamesraj_uk@yahoo.co.uk

## தேசிய ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் அடைவதற்கு பல கட்சி கலந்தாலோசனைகளும் ஏற்புடைமையும் தேவை

பாராளுமன்ற சட்டம் ஒன்றின் மூலமாக தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக் கிறது.

அரசியலமைப்பினால் வழங்கப்பட்டவாறு ஒவ் வொரு குடிமகனுக்கும் பொருளாதார, சமூக,கலாசார மற்றும் அரசியல் பரப்புகளில் சமத்துவமான வாய்ப்புக் கள் கிடைப்பதை உறுதிசெய்வதும் அடையாளங்களை பேணிப்பாதுகாக்கின்ற அதேவேளை பல்வகைமையை மதிக்கின்றதும் சகல சமூகங்களும் அமைதியுடனும் ஐக்கியத்துடனும் சகவாழ்வு வாழக்கூடியதுமான ஒப்புரவான சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்புவதுமே அதன் நோக்கமாகும்.

சட்டவரைவு சட்டவரைவு தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான மேற்பார்வைக் குழுவின் பரிசீலனைக்காக அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

சட்டவரைவை மீளாய்வு செய்வதற்கும் அதில் சேர்த் துக்கொள்ளப்படுவதற்கும் யோசனைகள் எதிர்பார்க்கப் படுகின்றன என்று இந்த குழு சிவில் சமூகத்துக்கு அறி வித்திருப்பதை தேசிய சமாதானப் பேரவை மெச்சுகிறது.

தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலக சட்டமூலம் இன,மத, சமூக அமைதியுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களை தழுவும் வகையில் பரந்த ஒன்றாக இருக்கிறது.

அமைக்கப்படவிருக்கும் அலுவலகத்துக்கு நாட்டில் தேசிய ஐக்கியம், நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதானத்தை அடைவதை நோக்கியும் நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பில் தேசியக் கொள்கை ஒன்றையும் தேசிய நடவடிக்கைத் திட்டத்தையும் வகுப்பதற்கும் தேவையான முன்மொழிவுகளைச் செய்வதற்கு ஆணை வழங்கப்பட்டிருக்கிறது.

ஆனால், உத்தேச சட்டமூலம் ஊடகங்களின் கவனத் தைப் பெரிதாகப் பெறவில்லை என்பதுடன் அவ்வாறு ஒன்று இருக்கிறது என்பதே சனத்தொகையில் பெரும் பாலானவர்களுக்கு தெரியாது. அதனால் இது குறித்து விரிவான பொதுக் கலந்துரையாடலுக்கு கூடுதல் கால அவகாசத்தை வழங்குமாறு அரசாங்கத்திடம் நாம் வேண்டுகோள் விடுக்கிறோம்.

சட்டமூலத்தின் குறிப்பிட்ட சில அம்சங்கள் குறித்து தேசிய சமாதானப் பேரவை அதன் விசனத்தை வெளிப் படுத்துகிறது.

சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்புக் கள் உட்பட உள்நாட்டு அமைப்புக்களினால் முன்னெ டுக்கப் படக்கூடிய சமாதானம் மற்றும் நல்லிணக்க செயற்திட்டங்களுக்கு வசதி செய்து கொடுப்பதற்கும் வழிகாட்டுவதற்கும் இந்த அலுவலகத்துக்கு வழங்கப் பட்டிருக்கும் அதிகாரம் சிவில் சமூகம் எவ்வாறு செயற்படவேண்டும் என்பது குறித்து ஆலோசனை வழங்கும் தன்மையானதாக இருப்பது குறித்து தேசிய சமாதானப் பேரவை கவலை கொண்டுள்ளது.

சிவில் சமூகத்தின் பணிகளை கண்காணிப்பதற்கும் மீளாய்வு செய்வதற்கும் அலுவலகத்துக்கு வழங்கப்படும் அதிகாரம் தேசிய நல்லிணக்கக் கொள்கை மற்றும் நடவடிக்கைத் திட்டத்தின் பின்னணியில் அடக்கு முறைத் தன்மை வாய்ந்ததாக அமையக்கூடியது என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறது.

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையினால் ( International Covenant on Civil and Political Rights - ICCPR) தடை செய்யப்பட்ட வெறுப்புப்பேச்சு குறித்த ஏற்பாடுகளை தேசிய சடடத்திற்குள் உள்வாங்குவதற்காக கொண்டு வரப்பட்ட சட்டம் (ICCPR Act ) அரசியல் ரீதியில் அரசாங் கத்துக்கு எதிரானவர்களை தண்டிப்பதற்கு திட்டமிட்ட முறையில் பயன்படுத்தப்பட்டுவரும் பின்னணியில் நோக்கும்போது இந்த அச்சம் மெய்யான தாகும்.

அலுவலகத்தின் கொள்கைத் தீர்மானங்களை எடுக் கும் குழுவை நியமிப்பதற்கான செயன்முறை விசனத்துக் குரிய இன்னொரு விடயமாகும்.

தற்போதைய வரைவின்படி அலுவலகத்தை மேற்பார்வை செய்யும் அமைச்சரினால் தெரிவுசெய்யப் படும் பதினொரு உறுப்பினர்களை இந்த குழுவுக்கு ஜனாதிபதி நியமிப்பார். அத்தகைய குழுக்களில் சிறு பான்மை இனத்தவர்கள் அலட்சியம் செய்யப் பட்டிருக் கிறார்கள் என்று ஏற்னெவே குரலெழுப் பப்பட்டிருக்கி றது.

இந்த செயன்முறை அரசியலமைப்புக்கான 21 வது திருத்தத்தின் நோக்கங்களுக்கு முரணாக அரசியல் ரீதியில் பக்கச்சார்பானதும் ஒருதலைப்பட்சமானதுமான தீர்மானங்கள் எடுக்கப்படக்கூடிய சாத்தியத்துக்கு வழிவகுக்கலாம். பாரபட்சமான நியமனங்கள் செய்யப் படும் போக்கு மீண்டும் தலையெடுப்பதை தடுக்கும் நோக்கத்தைக் கொண்ட 21 வது அரசியலமைப்பு திருத்தத்தின் உணர்வின் அடிப்படையில் பக்கச்சார்பற்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டிய முக்கியத்து வத்தை தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்துகிறது

தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலக சட்டமூலத்தில் கூறப்பட்டுள்ள தேசிய ஐக்கியம், சமாதானம் சகவாழ்வு போன்ற பாராட்டத் தக்க நோக்கங்களை பொறுத்தவரை இலங்கையின் பல்வேறுபட்ட சமூகங்களின் பிரதிநிதிகள் மத்தியில் கலந்தாலோசனையும் பேச்சுவார்த்தையும் அவசியம்.

தேசிய ஐக்கியத்துக்கு உண்மையான ஒரு நல்லி ணக்கச் செயன்முறையாக இதை முன்னெடுப்பதற்கான பாதையில் பன்முக விழுமியங்களைத் தழுவியதாக பல கட்சி கருத்தொருமிப்பை ஏற்படுத்துவதற்கு எதிரணி அரசியல் கட்சிகளுடன் குறிப்பாக சிறுபான்மை இன, மத சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளு டனும் சிவில் சமூகத்துடனும் விரிவான பேச்சுவார்த்தை களை நடத்தவேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்தை வலியுறுத்துகிறது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# 100 வீத வெற்றியுடன் முதல் சுற்றை நிறைவு செய்தது இந்திய அணி

தனது சொந்த நாட்டில் நடைபெற்றுவரும் 13ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் அத்தியாயத்தில் அற்புதமான ஆற்றல்களை வெளிப்படுத்திய இந்தியா முதல் சுற்றை 100 வீத வெற்றியுடன் நிறைவுசெய்தது.

பெங்களூர் எம். சின்னஸ்வாமி விளையாட்டரங்கில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 45ஆவதும் கடைசியுமான லீக் போட்டியில் நெதர்லாந்தை நையப்புடைத்த இந்தியா 160 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

இந்த வெற்றியுடன் தோல்வி அடையாத ஒரே ஒரு அணியாக அரை இறுதியில் இந்தியா விளையாடவுள்ளது.

இந்தியா சார்பாக முன்வரிசை வீரர்கள் ஐவரும் மிகத் திறமையாகத் துடுப்பெடுத்தாடி இந்தியாவின் வெற்றிக்கு வித்திட்டனர்.

அப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 50 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 410 ஓட்டங்களைக் குவித்தது. இதில் 244 ஓட்டங்கள் பவுண்டறிகளாக பெறப்பட்டது.

அணித் தலைவர் ரோஹித் ஷர்மா, ஷுப்மான் கில் ஆகிய இருவரும் 71 பந்துகளில் 100 ஓட்டங்களைப் பகிர்ந்து வலுவான ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர்.

ஷுப்மான் கில் 32 பந்துகளில் 51 ஓட்டங்களுடனும் அவரை தொடர்ந்து ரோஹித் ஷர்மா 61 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழந்தனர்.

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் ரோஹித் ஷர்மா 55ஆவது அரைச் சதத்தையும் கில் 12ஆவது அரைச் சதத்தையும் பூர்த்திசெய்தனர்.

அவர்களைத் தொடர்ந்து விராத் கோஹ்லியும் ஷ்ரேயாஸ் ஐயரும் 3ஆவது விக்கெட்டில் 71 ஓட்டங்களைப் பகிர்ந்து மொத்த எண்ணிக்கையை 200 ஓட்டங்களாக உயர்த்தியபோது விராத் கோஹ்லி 51 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். விராத் கோஹ்லி குவித்த 71ஆவது சர்வதேச ஒருநாள் அரைச் சதம் இதுவாகும்.

அதன் பின்னர் ஷ்ரேயாஷ் ஐயரும் கே. எல். ராகுலும் ஜோடி சேர்ந்து நெதர்லாந்து பந்துவீச்சாளர்களை நையப்புடைத்து இந்திய இரசிகர்களுக்கு பெரு விருந்து படைத்தனர்.

நெதர்லாந்தின் எல்லா பந்து வீச்சாளர்களையும் சுழற்றி அடித்து திக்பிரமிப்பில் ஆழ்த்திய இருவரும் அபார சதங்களைக் குவித்ததுடன் 4ஆவது விக்கெட்டில் 127 பந்துகளில் 208 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

இந்த வருட உலகக் கிண்ணத்தில் 4ஆவது விக்கெட்டில் பகிரப்பட்ட அதிசிறந்த இணைப்பாட்டமாக இது அமைந்தது.

ஷ்ரேயாஸ் ஐயர் 94 பந்துகளை எதிர்கொண்டு 10 பவுண்டறிகள், 5 சிக்ஸ்களுடன் ஆட்டம் இழக்காமல் 128 ஓட்டங்களைக் குவித்தார். இது அவரது 4ஆவது சர்வதேச ஒருநாள் சதமாகும்.

கடைசி ஓவரில் தனது சதத்தைப் பூர்த்தி செய்து ஆட்டம் இழந்த கே. எல். ராகுல் 64 பந்துகளில் 11 பவுண்டறிகள், 4 சிக்ஸ்களுடன் 102 ஓட்டங்களைப் பெற்றார். இது அவரது 7ஆவது ஒருநாள் சதமாகும்.

பந்துவீச்சில் பாஸ் டி லீட் 82 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

411 ஓட்டங்கள் என்ற இமாலய வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து 47.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 250 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

நெதர்லாந்தின் ஆரம்பத் துடுப்பாட்டம் சிறப்பாக அமையவில்லை.

ஆரம்ப வீரர் வெஸ்லி பரேசி (4) ஆட்டம் இழந்த போது மொத்த எண்ணிக்கை வெறும் 5 ஓட்டங்களாக இருந்தது.

எனினும் மெக்ஸ் ஓ'டவ்ட், கொலின் அக்கமன் ஆகிய இருவரும் 2ஆவது விக்கெட்டில் 61 ஓட்டங்களைப் பகிர்ந்து நெதர்லாந்துக்கு சிறு உற்சாகத்தைக் கொடுத்தனர்.

ஆனால், அவர்கள் இருவரும் 18 பந்துகள் வித்தியாசத்தில் ஆட்டம் இழந்தனர்.

ஓ'டவ்ட் 30 ஓட்டங்களையும் அக்கமன் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

அதன் பின்னர் சைப்ரேண்ட் எங்கள்ப்ரெச், அணித் தலைவர் ஸ்கொட் எட்வேர்ட்ஸ் ஆகிய இருவரும் மந்த கதியில் துடுப்பெடுத்தாடி விக்கெட்களைத் தக்கவைத்துக்கொள்ள முயற்சித்தினர்.

ஆனால், அவர்கள் இருவரும் 4ஆவது விக்கெட்டில் 39 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தபோது ஸ்கொட் எட்வேர்ட்ஸின் விக்கெட்டை பகுதிநேர பந்துவீச்சாளர் விராத் கோஹ்லி கைப்பற்றி இணைப்பாட்டத்துக்கு முடிவுகட்டினார்.

இந்தப் போட்டியில் பிரதான பந்துவீச்சாளர்களை அதிகமாக பயன்படுத்தாமலிருக்கும் நோக்கில் விராத் கோஹ்லி, ஷுப்மான் கில் ஆகியோரைப் பயன்படுத்திய ரோஹித் ஷர்மா தானும் 5 பந்துகளை வீசி ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

ஸ்கொட் எட்வேர்ட்ஸ் (17) ஆட்டம் இழந்த பின்னர் எங்க்ள்ப்ரெச்சுடன் ஜோடி சேர்ந்த பாஸ் டி லீட் 5ஆவது விக்கெட்டில் 33 ஓட்டங்களைப் பகிர்ந்து 12 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

மறுபக்கத்தில் மிகவும் பொறுமையாகத் துடுப்பெடுத்தாடிய எங்க்ள்ப்ரெச் 80 பந்துகளை எதிர்கொண்டு 45 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தார். (172 - 6 விக்.)

இந் நிலையில் டேஜா நிடாமனுரு, லோகன் வென் பீக் ஆகிய இருவரும் 7ஆவது விக்கெட்டில் 36 ஓட்டங்களைப் பகிர்ந்து இந்தியாவின் வெற்றியைத் தாமதிக்கச் செய்தனர்.

லோகன் வென் பீக் 16 ஓட்டங்களைப் பெற்றதுடன் அடுத்து களம் புகுந்த ரோலோவ் வென் டேர் மேர்வும் 16 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தார். அவரைத் தொடர்ந்து ஏரியன் டட் (5) களம் விட்டகன்றார்.

மத்திய வரிசையில் மிகவும் திறமையாகத் துடுப்பெடுத்தாடிய டேஜா நிடாமனுரு 39 பந்துகளில் 6 சிக்ஸ்கள், ஒரு பவுண்டறியுடன் 54 ஓட்டங்களைப் பெற்று கடைசியாக ரோஹித் ஷர்மாவின் பந்துவீச்சில் ஆட்டம் இழந்தார்.

பந்துவீச்சில் மொஹமத் சிராஜ் 29 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் ஜஸ்ப்ரிட் பும்ரா 33 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் குல்தீப் யாதவ் 41 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் ரவிந்த்ர ஜடேஜா 49 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பகுதிநேர பந்துவீச்சாளர்களான விராத் கோஹ்லி 13 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் ரோஹித் ஷர்மா 7 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

மொஹமத் ஷமி, குல்தீப் யாதவ், ஷுப்மான் கில் ஆகியோரும் பந்துவீசினர்.



## மன்னிப்பு கோரிய இலங்கை அணி

உலக கிண்ணப்போட்டிகளில் மிகமோசமாக விளையாடியமைக்காக இலங்கை அணி பொதுமக்களிடம் மன்னிப்பு கோரியுள்ளது.

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையில் இன்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அணித்தலைவர் குசல்மெண்டிஸ் மன்னிப்பு கோரியுள்ளார்.

2023உலக கிண்ணப்போட்டிகளில் மோசமாக விளையாடும்படி எந்த தரப்பும் அழுத்தங்களை பிரயோகிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அணித்தலைவர் பதவியை ஏற்றமை உங்களின் துடுப்பாட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தியதா என்ற கேள்விக்கு மெண்டிஸ் எதிர்பாராத தலைமைத்துவம் சிறிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம் ஆனால் எனினும் முன்னரும் தலைமை வகித்ததால் அதுதான் காரணம் என தெரிவிக்க முடியாது என குறிப்பிட்டுள்ளார்.

## இங்கிலாந்து அணித் தலைவராக தொடர்ந்து நீடிக்க விரும்புகிறேன்



ரி-20 மற்றும் ஒருநாள் போட்டிகளில் இங்கிலாந்து அணியின் தலைவராக தொடர்ந்து செயல்பட விரும்புவதாக அந்த அணியின் தலைவர் ஜோஸ் பட்லர் தெரிவித்துள்ளார்.

இந்த உலகக் கிண்ணத் தொடர் இங்கிலாந்து அணிக்கு மிகப் பெரிய ஏமாற்றமாக அமைந்தது. இதுவரை 8 போட்டிகளில் விளையாடியுள்ள இங்கிலாந்து அணி 2 போட்டிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது.

4 புள்ளிகளுடன் புள்ளிப்பட்டியலிலும் 7ஆவது இடத்தில் உள்ளது. ஏற்கனவே உலகக் கோப்பை அரையிறுதி வாய்ப்பை இழந்து வெளியேறியது. தொடர்ந்து 5 போட்டிகளில் ஏற்பட்ட தோல்விக்குப் பிறகு நெதர்லாந்துக்கு எதிரான போட்டியில் 160 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றது.

இந்த நிலையில், ரி-20 மற்றும் ஒருநாள் போட்டிகளில் இங்கிலாந்து அணியின் தலைவராக தொடர்ந்து செயல்பட விரும்புவதாக அந்த அணியின் தலைவர் ஜோஸ் பட்லர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது,

“அடுத்த மாதம் நடைபெறவுள்ள ரி-20 மற்றும் ஒருநாள் தொடர்களில் இங்கிலாந்து அணியை வழிநடத்த விரும்புகிறேன். இங்கிலாந்து கிரிக்கெட் சபைத் தலைவர் ராப் கீ இந்தியாவிற்கு வந்து இங்கிலாந்து அணியுடன் இணைய உள்ளார் என்பது எனக்குத் தெரியும்.


அவரிடம் போட்டி குறித்து பேசுவோம். அடுத்த மாதம் வரவிருக்கும் தொடர்கள் குறித்து ஆலோசிப்போம். என்னால் அணிக்காக ஓட்டங்கள் குவிக்க முடியாதது மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது. அதிலிருந்து மீண்டு வழமைக்கு வருவேன்.

இந்த உலகக் கிண்ணத் தொடர் மிக முக்கியமானதாக எங்களுக்கு அமைந்துள்ளது. நாங்கள் நினைத்தது போன்று இந்த உலகக் கோப்பைத் தொடரில் விளையாடவில்லை. நேற்றையப் போட்டியில் பென் ஸ்டோக்ஸ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்-என்றார்.

# ஹமாஸின் சுரங்க பாதையை அழிக்க நுரை குண்டு வீசிட இஸ்ரேல் தீவிரம்!

# காஸாவில் ஹமாஸின் முதுகெலும்பு உடைக்கப்படுமா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா




உலகை வியப்புக்குள்ளாக்கிய ஹமாஸின் ரகசிய சுரங்க போர்முறை (Secret Tunnel Warfare) பற்றி தற்போது தகவல்கள் பல வெளியாகின்றன. ஹமாஸ் அமைத்த ரகசிய சுரங்க நகரம் 260 அடி ஆழமாகவும் 500 கி.மீ. தொலைவுக்கு நீள்கிறது என தெரிவிக்கப்படுகிறது.

காசா பகுதியின் முக்கிய நகரங்களை இணைக்கும் வகையில் சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டு உள்ளன என்றும், இதில் பல்வேறு சுரங்க பாதைகள் எகிப்து வரை நீள்கின்றன என அமெரிக்க, இஸ்ரேலிய உளவுத் துறை வட்டாரங்கள் கூறியுள்ளன.

2021ம் ஆண்டில் ஹமாஸின் 100 கிலோமீட்டர் நீளம் கொண்ட சுரங்கத்தை தாங்கள் அழித்துவிட்டோம் என இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்தது. இந்த ஆக்கம் ஹமாஸின் சுரங்கம் பற்றி அலசும் சிறிய வரலாற்றாய் வாகும்.

**சுரங்கத்தில் ஆயுத கிடங்குகள்:**

இந்த சுரங்கப் பாதைக்குள் பிரம்மாண்ட தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. இந்த விடுதிகளில்தான் இஸ்ரேலிய பிணைக் கைதிகள் அடைக்கப்பட்டு உள்ளனர் எனவும் கூறப்படுகிறது. இதனால் சுரங்கப் பாதை என்று கூறுவதைவிட சுரங்க நகரம் என்றே அழைக்கலாம்.


தரவுகளின் படி ஹமாஸ் போராளிகளின் ஆயுத கிடங்குகளும் சுரங்கப் பாதையில் உள்ளன. அவற்றில் ஆயிரக் கணக்கான ஏவுகணைகள் சேமித்து வைக்கப்பட்டு உள்ளன. பெரும்பாலான சுரங்கப் பாதைகள் சிலந்தி வலை பின்னல் போல கட்டப்பட்டு உள்ளன.

இந்த பாதைகள் எங்கு தொடங்கி, எங்கு முடிகிறது என்பது ஹமாஸ் அமைப்பினர்க்கு மட்டுமே தெரியும். வீடுகள், மசூதிகளில் சுரங்கப் பாதைகளின் நுழைவு வாயில்கள் உள்ளன.

ஹமாஸ் தலைமை அலுவலகமும் சுரங்க நகரத்தில் செயல்படுகிறது. சிறிய மருத்துவமனை, மின்சாரத்தை உற்பத்தி செய்ய ஜெனரேட்டர் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் சுரங்க நகரத்தில் இருக்கின்றன.

முன்பு இஸ்ரேல் ராணுவ நடவடிக்கையால் காசா பகுதிக்கான அத்தியாவசிய பொருட்கள் விநியோகம் முழுமையாக தடைபட்டிருக்கிறது. ஆனால் ரகசிய சுரங்கப் பாதைகள் வழியாக எகிப்தில் இருந்து காசாவுக்கு







குடிநீர், உணவு, எரிபொருள், ஆயுதங்கள் உள்ளிட்டவை தொடர்ந்து கடத்தி வரப்படுகின்றன. இதன் காரணமாகவே ஹமாஸ் அமைப்பால் தொடர்ந்து போரில் ஈடுபட முடிகிறது.

**ஹமாஸின் சுரங்கப் பாதையை அழிக்க அதன் நுழைவு வாயில்களில் நுரை குண்டுகளை வீசினால், பின்னர் நுரை வெளியாகி சுரங்கப் பாதைகளை முழுமையாக அழித்துவிடும். மற்றொரு திட்டமாக மத்திய தரைக்கடல் பகுதியில் இருந்து மோட்டார் பம்புகள் மூலம் ஹமாஸின் சுரங்க பாதைகளில் தண்ணீரை செலுத்தி, தண்ணீரில் மூழ்கினால் ஹமாஸின் முதுகெலும்பு உடைந்துவிடும் என இஸ்ரேலிய ராணுவ வட்டாரங்கள் கணிப்பிட்டுள்ளன.**



மெக்ஸிகோவில் இருந்து அமெரிக்காவுக்கு சுரங்கப் பாதை வழியாக போதை பொருட்கள் கடத்தப்படுகின்றன. இந்த சுரங்கப் பாதைகளை அமைக்கவும் ஹமாஸ்




தீவிரவாதிகளே உதவி செய்துள்ளனர் என அமெரிக்க, இஸ்ரேலிய உளவு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஒருகாலத்தில் கடத்தலுக்காக பயன்படுத்தப்பட்ட சுரங்கங்கள் தற்போது கட்டுப்பாட்டு அறை, போர் ஆலோசனைகள், ஆயுத கிடங்கு போன்றவற்றுக்காக பயன்படுத்தப்படும் அதிநவீன சுரங்கமாக மாறியிருக்கிறது.

இத்தனை ரகசியங்களை வைத்திருக்கும் ஹமாஸின் சுரங்கப்பாதை உண்மையில் எவ்வளவு நீளம், அகலம் போன்றவை எல்லாம் சர்வதேச உளவு அமைப்பிற்கே தெரியாத புதிராக இருந்து வருகிறது.

**சுரங்க பாதையை அடைக்க நுரை குண்டுகள்:**

காசா பகுதியில் ஹமாஸ் தொடர்புடைய இடங்களில் தற்போது இஸ்ரேலிய போர் விமானங்கள் தாக்குதல் நடத்தி வருகின்றன. தற்போது காசா பகுதியில் தரைவழியாக தாக்குதலை இஸ்ரேல் ராணுவம் தீவிரப் படுத்தியுள்ளது.

ஹமாஸின் சுரங்கப் பாதைகள் இஸ்ரேலுக்கு பெரும் சவாலாக இருப்பதனால், இந்த சவாலை எதிர்கொள்ள நுரை குண்டுகளை இஸ்ரேல் தயார் செய்துள்ளது. இந்த குண்டுகளில் வெடிபொருட்கள் கிடையாது. அதற்குப் பதிலாக பல்வேறு வகையான ரசாயனங்கள் உள்ளன.

ஹமாஸின் சுரங்கப் பாதையை கண்டுபிடித்து உடன் அதன் நுழைவு வாயில்களில் நுரை குண்டுகள் வீசப்படும். இந்த குண்டுகளில் இருந்து நுரை வெளியாகி சுரங்கப் பாதைகளை முழுமையாக அடைத்துவிடும். சுரங்கப் பாதைக்குள் இருக்கும் ஹமாஸ் போராளிகளால் வெளியேற முடியாது. அவர்களால் எதிர் தாக்குதல் நடத்தவும் முடியாது. சுரங்கத்துக்குள்ளேயே அவர்கள் மரணிக்கும் சூழல் ஏற்படும் என இஸ்ரேல் கணிப்பிட்டுள்ளது.

ஹமாஸின் சுரங்க நகரத்தை அழிக்க மற்றொரு திட்டத்தையும் ஆலோசித்து வருகிறதாக இஸ்ரேல் கூறியுள்ளது. மத்திய தரைக்கடல் பகுதியில் இருந்து மோட்டார் பம்புகள் மூலம் ஹமாஸின் சுரங்க பாதைகளில் தண்ணீரை செலுத்த இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது. சுரங்க நகரம் தண்ணீரில் மூழ்கினால் ஹமாஸின் முதுகெலும்பு உடைந்துவிடும் என இஸ்ரேலிய ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**260 அடி ஆழ 500 கி.மீ. நீள சுரங்க பாதை:**

(16ம் பக்கம் பார்க்க)



# நின்று கொல்லும் நீரிழிவை வெற்றி கொள்வோம்

## இன்று சர்வதேச நீரழிவு தினம்



**நீரிழிவு பற்றிய அறிமுகம்**

மனித குலத்தின் சுகவாழ்வில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்தும் நோய்களின் அரசனான நின்று கொல்லும் நீரிழிவு நோய் உலகில் பல நூற்றாண்டுகளாய் உள்ளது. நீரிழிவை கட்டுபடுத்த உலகசுகாதார ஸ்தாபனமும் சகல அரச மற்றும் தனிப்பட்ட சுகாதார நிறுவனங்களும் மிகவும் பிரயத்தனம்படுகின்றனர் எனினும் இந்நோயாளர்களின் தொகை வருடா வருடம் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. கட்டுப்பாடற்ற நீரிழிவால் பல்வேறு நோய்கள் இயல்பாக ஏற்படக்கூடும். மனித குலத்திற்கு நீரிழிவால் ஏற்படுத்தும் தாக்கத்தை உணர்ந்த ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் நீரிழிவைக் கட்டுப்படுத்த நவம்பர் 14ம் திகதியை நீரிழிவு தினமான பிரகடனப்படுத்தியுள்ளது.

முன்பு நீரிழிவு நோயானது முதியவர்களிடமும் உடல் உழைப்புக் குறைந்த பணம் படைத்தவரிடமும் காணப்பட்டது. தற்போது சிறுவர் முதல், முதியோர் வரை பால் வேறுபாடின்றி நீரிழிவுநோய்க்கு ஆளாகின்றனர்.

**நீரிழிவு என்றால் என்ன?**

குருதியில் குளுக்கோசின் அளவு நியம அளவிலும் பார்க்க உயர்வடைகின்ற நிலைமையே நீரிழிவாகும். குருதியில் குளுக்கோசின் அளவினை கூடி குறையாது சம சீராக பேன வேண்டும். ஒவ்வொரு மனிதனின் குருதியிலும் குறிப்பிட்டளவு குளுக்கோஸ் உடலுக்கு சக்தியை வழங்க இருத்தல் வேண்டும்.

நீரிழிவு ஒர் குணப்படுத்த முடியாத நோயாகும். ஆனால் இதனைக் கட்டுப்படுத்த வாழ்நாள் முழுவதும் அதற்குரிய கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடித்தல் அவசியமாகிறது.

**நீரிழிவு பரிசோதனைகள்**

**Fasting Blood Sugar FBS=70 – 100mg/dl** *(10 மணித்தியாலங்கள் உணவு உட்கொள்ளாமல் இருந்த பின்னர் குருதியின் குளுக்கோசின் அளவு)*

**Post Pranding Blood Sugar PPBS= 140mg/dl** *(உணவை உட்கொண்டு 2 மணித்தியாலங்களின் பின்னர் குருதியின் குளுக்கோசின் அளவு)*

**Random Blood Sugar (RBS =200mg/dl** எழுந்தமானமாக எந்த நேரமும் செய்யப்படும் பரிசோதனை

**HBA1C** இது ஆய்வு கூடத்தில் செய்யும் பரிசோதனையாகும். மூன்று மாதம் குருதியிலுள்ள குளுக்கோசின் சராசரி அளவைக் காட்டும் நீரிழிவு நோய் அற்றவர்களுக்கு 5.6 க்குள் இருத்தல் வேண்டும்.

நீரிழிவு நிலையை அறிவதற்கு **HBA1C** பரிசோதனை சிறந்த முறையாகும்.

**வருடாந்த பரிசோதனைகள்**

நீரிழி நோயாளர்கள் வருடத்திற்கு ஒரு முறையாவது தமது இதய, சிறுநீரக, கண், பாதம் நரம்பு போன்றவற்றை பரிசோதித்து அவற்றின் செயற்திறன் பற்றி அறிதல் வேண்டும்.

**நீரிழிவு நோய் வகைகள்**

**நீரிழிவு வகை I**

- உடலில் இன்சுலின் சுரக்கப்படாமையால் ஏற்படும் நிலையே நீரிழிவு நோய் வகை ஐ ஆகும். வைத்தியரின் ஆலோசனைப்படி இவ்வாறான நோயாளர்கள் வாழ்நாள் முழுவதும் தினமும் இன்சுலினை ஊசிமூலம் ஏற்றுதல் வேண்டும்.

**நீரிழிவு வகை II**

- இன்சுலின் சுரப்பிலும், செயற்பாட்டிலும் தடை ஏற்படுவதாலும் பெரும்பாலும் பரம்பரையாலும், முதுமை காரணமாகவும், துரித உணவுப் பழக்கம் காரணமானமாகவும், சீனி பண்டங்கள் மற்றும் அதிக மாப்பொருட்கள் உண்பவர்களையும் உடல் பருமனானவர்களிடமும் இவ்வகை நீரிழிவு நோய் II காணப்படுகின்றது.
- நீரிழிவு நோயாளர்கள் எக்காரணம் கொண்டு மருந்துகளை கூட்டிக்குறைக்கவோ எடுப்பதை சுயமாக நிறுத்தக்கூடாது.

**நீரிழிவு வகை III**

**கர்ப்பகால நீரிழிவு**

- இது கற்ப காலத்தில் தற்காலிகமாய் ஏற்படுகிறது.
- கற்பகாலம் நிறைவுற்றதும் நீரிழிவு இல்லாமபோக கூடும் சிலருக்கு இது தொடரலாம்.

**நீரிழிவின் அறிகுறிகள்**

- அடிக்கடி சிறுநீர் கழித்தல்
- அதிகப்படியான தாகம்
- உடல் பலவீனம் / நிறை இழப்பு
- அதிகப்படியான பசி
- புண்கள் ஆறுவதற்கு நீண்ட நாட்கள் எடுக்கும்.
- நரம்புத் தொகுதியில் பாதிப்பு ஏற்படுகிறது

**குருதியில் குளுக்கோசின் அளவு கூடினால் ஏற்படும் பாதிப்புக்களாவன**

- பார்வை மங்கும்
- அதிக தாகம்
- சோம்பலத் தன்மை
- வயிற்றுப் பிரட்டல்.
- அடிக்கடி சிறுநீர் கழித்தல்
- அதிகபசி / களைப்பு

**நீரிழிவை எவ்வாறு கட்டுப்படுத்தலாம்?**

- அளவான ஆரோக்கியமான ஊட்டச்சத்து நிறைந்த உணவை உட்கொள்ளுதல் வேண்டும்.
- மாப்பொருட்கள் மற்றும் மாப்பண்டங்கள் அளவாக உண்ணுதல் வேண்டும்.
- சீனி, சீனி கலந்த பானங்கள் (சோடா, ஐஸ்கிறீம் வகைகள்) மற்றும் சீனிப் பண்டங்களைத் தவிர்த்தல் வேண்டும்.
- தினமும் 30 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்தல் வேண்டும். (வேக நடையே சிறந்த உடற்பயிற்சியாகும்)
- மன அழுத்தமற்று வாழுதல் வேண்டும் இதற்கு தியானம், யோகா பயிற்சிகள் சிறந்தது.
- வாழ்நாள் முழுவதும் வைத்தியரின் ஆலோசனைப்படி மருந்துகளை கிரமமாக உட்கொள்ளுதல் வேண்டும்.

**உடற்பயிற்சியால் ஏற்படும் நன்மைகள்**

- உடல் நிறை அதிகரிப்பு குறையும்.
- இரத்த அழுத்தம் குறைந்திடும்.
- சீரான உடல் அமைப்பு ஏற்பட்டு உடல் அழகு அதிகரிக்கும்
- குருதியில் குளுக்கோசின் அளவு மற்றும் கொழுப்பின் அளவு குறையும்
- உற்சாகம் ஏற்படும்.

**உணவு முறை**

- சாதாரண ஒருவருக்கு 1500 முதல் 2000 கலோரி வரை ஒருநாள் செயற்பாடுகளுக்கு தேவையாக உள்ளது. இதனை பெற்றுக்கொள்ள காலையிலும் இரவிலும் நான்கு இடியப்பம், 1½ புட்டு, மூன்று தோசை இவற்றில் ஏதாவது ஒன்றை அதிக மரகறிவகையுடன் உண்ணுதல் வேண்டும்.
- அவரை இன தானியங்கள் (கடலை, கௌப்பி, பயறு) இவற்றை உணவுடன் சேர்த்து அல்லது தனியாக உட்கொள்ளலாம்.
- சம்பல், சொதி, பொரியல் என்பவற்றை இயன்றளவு குறைக்கவும்.
- மதிய உணவாக ஒன்றரை கப் (200அட அளவுடைய கப்) சோற்றுடன் அதன் அளவுக்கு அதிகமான மரகறிவகைகள் மற்றும் சிறிய துண்டு மீன் அல்லது தோல் நீக்கிய கோழி இறைச்சி 30 - 50ப உண்ணுதல் வேண்டும்
- உண்ணும் மாப்பொருள்களினால் கிடைக்கபெறும் சக்தியை பயன்படுத்த கூடியதாய் வழமையாக தொழிற்பாடுகளை விட 30 நிமிடம் தொடக்கம் 1 மணி நேரம் வரை மேலதிக உடற்பயிற்சி (வேகமாக நடத்தல், சைக்கிள் ஓடுதல்) செய்தல் வேண்டும்
- தவறின் மேலதிக குழுக்கோசு கொழுப்பாக மாற்றமடைந்து குருதிக்கலன்களை அடைக்கக்கூடும்.
- அதிக சீனி உள்ள பழங்களை தவிர்க்கவும். (பேரிச்சம்பழம், மாம்பழம், பிலாப்பழம்) நாவற்பழம், கொய்யாப்பழம், பப்பாசி பழம், நெல்லிக்காய், விளாம் பழம் உண்பதற்கு சிறந்தவை.
- வாழைப்பழம் ஒருநாளைக்கு ஒன்று மட்டும் உட்கொள்ளலாம்.
- நாம் ஒவ்வொரு வேளைகளிலும் உண்ணும் உணவு சகல ஊட்டச்சத்துக்களையும் உள்ளடக்கப்பட்ட நிறை உணவாக இருத்தல் வேண்டும் இவ்வகையான உணவுகள் நோய் எதிர்ப்புசக்தியைக் கூட்டும்.
- காலை உணவு 7.00 மணிக்கும் மதிய உணவு 1.00 மணிக்கும் இரவு உணவு 7.00 மணிக்கும் உண்ணுதல் சிறந்ததாகும்.

**மன அழுத்தம்**

- மன அழுத்தமே சகல நோய்களுக்கும் காரணமாகின்றது.
- ஆசையை விட்டால் ஆனந்தம் உண்டு.
- எமது பேராசையே மன அழுத்தத்திற்கு காரணமாக அமைகின்றது எம்மை மற்றவர்களிடம் ஒப்பிட்டு பார்ப்பததை தவிர்த்தல் வேண்டும்.
- தினமும் தியானம் செய்வதாலும், யோகா பயிற்சி ஈடுபடுவதாலும் மற்றும் சுவாசப்பயிற்சியிலும் இறைவழிபாட்டிலும் சந்தோசமாக சகலருடனும் கதைத்து மகிழ்வதாலும் மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்தலாம்.

**நீரிழிவு நோயாளர்களுக்கு கண் பாதுகாப்பு பற்றிய அறிவுறுத்தல்கள்.**

- நீரிழிவு நோய் கண், மூளை, இருதயம் மற்றும் சிறுநீரகத்தைப் பாதிக்கும்.
- இந்நோய் உள்ளவர்களுக்கு மற்றவர்களை விட பார்வைக் கோளாறு ஏற்படும் வாய்ப்பு இரண்டு மடங்கு அதிகம்.
- கண்ணில் முக்கியமாக பின்புறமுள்ள விழித்திரையின் இரத்த நாளங்களைப் பாதிக்கும்.
- விழித்திரையில் ஏற்படும் மாறுதல்களை கண் மருத்துவர்களினால் மட்டுமே பரிசோதித்து கண்டறிய முடியும். மூளை இருதயம், மற்றும் சிறுநீரகங்களிலும் இதே மாறுதல்கள் ஏற்படுவதால், இப்பரிசோதனை மூலம் இவற்றின் தன்மைகளையும் அறிய முடியும்.
- நீரிழிவு நோயினால் ஏற்படும் விழித்திரை பாதிப்பு, நோயின் தீவிரம் மற்றும் எவ்வளவு காலம் சர்ககரை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதைப் பொறுத்தது.
- பல வருடங்கள் நோய் உள்ளவர்களில் 70 முதல் 80 சதவீதம் பேருக்கு விழித்திரை பாதிப்பு ஏற்படும்.
- நீரிழிவு நோயாளிகளுக்கு பார்வையிழக்கும் வாய்ப்பு மற்றவர்களை விட 25 மடங்கு அதிகம் உள்ளது.
- குறைந்த பார்வை அல்லது பார்வையிழப்பு ஏற்படும் வரை எந்தவித அறிகுறிகளும் தெரியாது.
- விழித்திரை பாதிப்பை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடித்து லேசர் சிகிச்சையளித்தால் கணிசமான அளவில் பார்வையிழப்பைத் தடுக்கலாம்.
- லேசர் சிகிச்சையினால் இருக்கும் பார்வையைப் பாதுகாக்க முடியுமே தவிர இழந்த பார்வையைத் திரும்பப் பெற முடியாது.

விழித்திரை பாதிப்பினால் ஏற்படும் பார்வையிழப்பைத் தடுக்க. நீரிழிவு நோயாளிகள் அனைவரும் 12 மாதத்திற்கு ஒரு முறையேனும் தங்கள் கண்களை கண் மருத்துவரிடம் அவசியம் பரிசோதித்துக் கொள்ள வேண்டும் விழித்திரை பாதிக்கப்பட்டிருந்தால் அடிக்கடி பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் இவ்வாறு செய்து வந்தால் கண் பார்வையை முற்றிலும் இழக்காமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

**லயன் தி.மைக்கல்**

# ஹமாஸின் சுரங்க பாதையை அழிக்க...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது இஸ்ரேல் பாலஸ்தீனம் இடையேயான போர் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வரும் நிலையில், ஹமாஸ் படைக்குழுவின் சுரங்கம் சிறிது சிறிதாக இஸ்ரேலால் தகர்க்கப்படுவது தொடர்பான தகவல்கள் வெளியாகி உள்ளன.

வான்வழி தாக்குதல், கடல்வழி தாக்குதல், தரைவழி தாக்குதல் என்று கேள்விப் பட்டிருந்தாலும், நிலக்கீழ் தாக்குதல் அதாவது சுரங்கம் மூலம் தாக்குதல் நடத்துவது எதிரி படையை துவம்சம் செய்யும் யுத்தியாக இருக்கும் என்றும் முதலில் எதிர்பார்க்கப்பட்டது.

ஹமாஸ் கடந்த 7-ம் தேதி இஸ்ரேல் மீது போர் தொடுத்தது. பின்னர் இருதரப்புக்கும் இடையிலான போர் தீவிரமடைந்து வருகிறது. ஹமாஸ் அமைப்பின் தாக்குதலைத் தொடர்ந்து, காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் ஒரு மாதத்தைக் கடந்துள்ளது.

வடக்கு காசா மீதான தாக்குதலை இஸ்ரேல் ராணுவம் தீவிரப்படுத்தியுள்ள நிலையில், 4,000-க்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட 12,000-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக பாலஸ்தீன சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் வான் வழி தாக்குதலில் காசா பகுதியில் சுமார் 40 சதவீத கட்டிடங்கள் தரைமட்டமாக்கப்பட்டு உள்ளன. காசாவுக்கான குடிநீர், உணவு பொருட்கள், மின்சாரம், எரிபொருள் விநியோகம் முழுமையாக துண்டிக்கப்பட்டு உள்ளது.

காசாவில் பொதுமக்களின் கட்டடங்கள், வழிபாட்டு தலங்கள், கல்வி நிலையங்களை இஸ்ரேல் குறிவைத்து தாக்குகிறது என்ற குற்றச்சாட்டு எழும் நிலையில், இதற்கு கீழ்தான் ஹமாஸின் சுரங்கம் இருக்கிறது என்றும், அதைத்தான் தாக்குகிறோம் என்று வாதிடுகிறது இஸ்ரேலிய படை.

அல் - குத் மருத்துவமனை மீது தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், கடும் சேதம் ஏற்பட்டுள்ளதால், அந்த மருத்துவ சேவை நிறுத்தப்பட்டுள்ளதாக நிர்வாகம் அறிவித்துள்ளது. மருத்துவமனைகள் மீதும், அகதிகள் முகாம்கள் மீதும் இஸ்ரேல் குண்டுவீசி தாக்குதல் நடத்தி உள்ளதாக மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் சுமார் 260 அடி ஆழத்தில் 500 கி.மீ. தொலைவுக்கு ரகசிய சுரங்க நகரத்தை ஹமாஸ் அமைத்துள்ளனர் என்றும், இந்த சுரங்க



நகரத்தில் பதுங்கியிருந்து இஸ்ரேல் ராணுவத்துக்கு எதிராக அவர்கள் போரிட்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் 2021ம் ஆண்டு, ஹமாஸின் 100 கிலோ மீட்டர் நீளம் கொண்ட சுரங்கத்தை நாங்கள் அழித்துவிட்டோம் என்று இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்தது. ஆனால் இதற்கு பதிலடி கொடுத்த ஹமாஸ், நீங்கள் அழித்தது வெறும் 5 சதவீதமான சுரங்கத்தைத்தான். எங்கள் சுரங்க உறைவிடம் மொத்தமாக 500 கிலோ மீட்டர் நீளம் கொண்டது என்று தெரிவித்தனர்.

**காசா சுரங்க பாதை வரலாறு:**

1948 இஸ்ரேல் உருவாகியது முதல் 1967 வரை காசா பகுதி எகிப்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. பின்னர் 1967-ல் நடந்த போரில் எகிப்திடம் இருந்து காசா பகுதியை இஸ்ரேல் கைப்பற்றியது. இதன்பிறகு எகிப்து, காசா எல்லைப் பகுதியில் தடுப்புச் சுவரை எழுப்பியது. அப்போது எகிப்தில் உள்ள தங்களது உறவினர்களை சந்திக்க காசா பகுதி மக்கள் எகிப்துக்கு ரகசியமாக சுரங்கப் பாதை அமைத்தனர்.

இதை தடுக்க அமெரிக்காவின் உதவியுடன் எகிப்து அரசு கடந்த 2009-ம் ஆண்டில் காசா எல்லையில் 16 அடி ஆழத்தில் அஸ்திவாரம் அமைத்து, 20 அடி உயரத்துக்கு இரும்பிலான சுவரை கட்டியது.

**எகிப்து ஊடக எரிபொருள், உணவு, மருந்துகள்:**

இத்தகைய இரும்பு சுவருக்கும் கீழாக காசாவில்



இருந்து எகிப்துக்கு ரகசிய சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டன. இந்த பாதைகள் வழியாக எகிப்தில் இருந்து ஆயுதங்கள், எரிபொருள், உணவு பொருட்கள், மருந்துகள், கட்டுமான பொருட்கள் காசாவுக்கு கொண்டு வரப்பட்டன.

கடந்த 2005-ம் ஆண்டில் காசாவில் இருந்து இஸ்ரேல் ராணுவம் முழுமையாக வெளியேறியது. அதன் பிறகு ஹமாஸ் போராளிகள், காசா பகுதியில் பிரம்மாண்ட சுரங்க நகரத்தை நிர்மாணிக்கும் பணியை தொடங்கினர். நாள்தோறும் 22,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் சுரங்கப் பாதை அமைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதற்கான கட்டுமான செலவை ஈரானும், முஸ்லிம் அமைப்புகளும் ஏற்றுக் கொண்டன என தெரிவிக்கப்பட்டது. சமீபத்திய புள்ளிவிவரத்தின்படி ஹமாஸ் போராளிகள் காசா பகுதியில் சுமார் 260 அடி ஆழத்தில் 500 கி.மீ. தொலைவு நீளத்துக்கு சுரங்கப் பாதையை அமைத்துள்ளதாக உளவுத் தகவல்கள் வெளிவந்தன.

